தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 09.10.2013

### வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம்: புயலாக வலுப்பெறும் வாய்ப்பு

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தமான் மற்றும் மியான்மர் இடையே உள்ள கடல்பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை திங்கள்கிழமை உருவானது. இது தற்போது, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்துள்ளது. மேலும், இது ஆந்திரம் மற்றும் ஒடிசா கடற்கரையை நோக்கி நகர்ந்து வருகிறது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணி அளவில் அந்தமான் தலைநகர் போர்ட் பிளேருக்கு வடகிழக்கே 300 கி.மீ. தூரத்திலும், விசாகப்பட்டணத்தில் இருந்து தென்கிழக்கே 1,470 கி.மீ. தூரத்திலும் நிலைகொண்டிருந்தது.

இது புதன்கிழமை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் பின்னர் புயலாகவும் வலுப்பெற வாய்ப்புள்ளது. மேலும் இது அடுத்த 72 மணி நேரத்தில் ஆந்திர மற்றும் ஒடிசா மாநிலங்களுக்கு இடையே கரையைக் கடக்க வாய்ப்புள்ளது.

காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக அந்தமான் பகுதியில் உள்ள கடல்பரப்பு கொந்தளிப்பாக இருக்கும். மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

காற்றழுத்த தாழ்வு மண்டலம் திசை மாறி தமிழக கடற்கரையை நோக்கி நகர்ந்தால் தமிழகத்தில் கன மழை பெய்யும்.

இடியுடன் கூடிய மழை: இதற்கிடையே, வெப்ப சலனம் காரணமாக தமிழகம் மற்றும் புதுவையின் சில பகுதிகளில் புதன்கிழமை மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கறவை மாடுகளுக்கு வேகமாக பரவும் வாய்கோமாரி நோய்

காஞ்சிபுரம் மாவட்டத்தில், பல்வேறு பகுதிகளில் கறவை மாடுகளை தாக்கும் கொடிய வாய்கோமாரி நோய் அதிகளவில் பரவுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கால்நடைகளை கடுமையாக தாக்கும் இந்நோய், கறவை மாடுகள், பன்றிகள், ஆடுகள் ஆகியவற்றை தாக்கும்.

இந்நோய் கடந்த சில மாதங்களாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கால்நடைகளைத் தாக்கி வருகிறது.

இந்நோய் தாக்காமல் இருக்கும் வகையில் கடந்த செப்டம்பர் மாதம் சிறப்பு முகாம்கள் ஆங்காங்கே நடத்தப்பட்டன.

இருந்தபோதும் இந்நோய் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வேகமாக பரவி வருகிறது.

குறிப்பாக காஞ்சிபுரம் வட்டத்தில் ஏரிவாய், அஞ்சூர், கலியனூர், மதுராந்தகம் வட்டத்தில் பெரும்பாக்கம், தண்டரை, திருப்போரூர் வட்டத்தில் மடசயத்தூர், செம்பாக்கம், கரும்பாக்கம் ஆகிய கிராமங்களில் வாய்கோமாரி நோயால் கறவை மாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நோய் தாக்கிய சில மாடுகள் இறந்துள்ளன.

இது குறித்து பாதிக்கப்பட்ட பகுதி விவசாயிகள் சிலர் கூறியது: "கால்நடைத் துறையினர் தடுப்பூசி போடுவதாக அறிவித்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் எங்கள் பகுதியில் கால்நடைத் துறை அதிகாரிகள் வரவில்லை. இது குறித்த அறிவிப்புக் கூட எங்களுக்கு முறையாக வந்து சேரவில்லை.

மேலும் இந்நோய் அறிகுறி குறித்தும் எங்களுக்கு கால்நடைத் துறையினர் விளக்கம் அளிக்கவில்லை. இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம்' என்றனர்.

இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் நேரு கூறியது: "அனைத்து கிராமங்களிலும் கால்நடை மருத்துவக் குழுவினர் சென்று கறவை மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு வாய்கோமாரி நோய்த் தடுப்பு ஊசிகளைப் போட வேண்டும். மேலும் நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளைப் பராமரிப்பது குறித்து விளக்கமளிக்க வேண்டும்.

மேலும் இந்நோயால் இறந்த கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்' என்றார் நேரு.

## தரம் குறைந்த விதைகளை விற்றால் நடவடிக்கை

ராமநாதபுரம் மாவட்டத்தில் தரம் குறைந்த விதைகளை விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் மணிமாறன் தெரிவித்துள்ளார்.

சென்னை வேளாண்மை இயக்குர் உத்தரவிற்கிணங்க, விதை ஆய்வு துணை இயக்குநர் மணிமாறன் தலைமையிலான சிறப்புக்குழுவினர் மாவட்டத்தில் ஆர்.எஸ். மங்கலம் மற்றும் திருவாடானை வட்டாரங்களில் உள்ள விதை விற்பனை நிலையங்களில் 7-ஆம் தேதி திடீர் ஆய்வு நடத்தப்பட்டது. மாவட்டத்தில் 2013-2014 ஆம் ஆண்டில் இதுவரை 582 விதை விற்பனை நிலையங்களில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 563 விதை மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. அதில 37 விதை மாதிரிகள் தரம் குறைபாடு உள்ளவை எனக் கண்டறியப்பட்டு 59.036 லட்சம் மதிப்பிலான 155.250 டன் விதைகள் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர் நடவடிக்கையாக சம்மந்தப்பட்ட விதை உற்பத்தியாளர்கள்,விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் மீது வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே ராமநாதபுரம் மாவட்டத்தில்

உள்ள விதை விற்பனையாளர்கள் இனத்தூய்மையான சுத்தமான பிற ரக கலப்பு இல்லாத விதைகளை விவசாயிகளுக்கு வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

நெல் விதைகள் 80 சதவீதம் முளைப்புத் திறனுடன் இருக்க வேண்டும். விவசாயிகளுக்கு விற்பனைக்கான ரசீது வழங்க வேண்டும். பரமக்குடி விதை பரிசோதனை நிலையத்துக்கு விதை மாதிரிகள் அனுப்பி, சோதனை முடிவில் தரம் தேறிய விதைகளையே விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆய்வின் போது வேளாண்மை உதவி இயக்குநர் கமால்தீன் மற்றும் விதை ஆய்வாளர் மருதுபாண்டி ஆகியோர் உடன் இருந்தனர்.

### விருதுநகர் பகுதியில் கனமழை: விவசாயிகள் மகிழ்ச்சி

விருதுநகர் பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை திடீரென 1 மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

விருதுநகர் பகுதியில் கடும் வெயில் வாட்டி வதைத்து வந்தது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மாலையில் இருட்டிக் கொண்டு கருமேகம் சூழ்ந்து கனமழை பெய்யத் தொடங்கியது. பழைய பேருந்து நிலையம் மற்றும் சாலைப்பகுதியில் கழிவு நீருடன், மழை நீர் கலந்து குளம்போல் காட்சி அளித்தது.

இதனால், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பஸ் நிலையத்திற்குள் நிற்க முடியாமல் சிரமப்பட்டனர். அதோடு, கழிவுநீர் வாய்க்காலில் மழை நீர் நிரம்பி பெருக்கெடுத்து பஸ் நிலையத்திற்குள் புகுந்ததால் துர்நாற்றம் ஏற்பட்டது. மழையால் சாலைகள் இருண்டிருந்ததால் பஸ்கள் முகப்பு விளக்கை எரிய விட்டுச் சென்றன.

ஏற்கனவே கடந்த மாதம் பெய்த மழையையடுத்து விவசாயிகள் விதைப்பு பணிகளை மேற்கொண்டிருந்தனர். இப்பயிர்கள் நன்றாக வளர்ந்து வந்த நிலையில், சில நாள்களாக மழை பெய்யாத நிலையில் கடும் வெயிலால் கருகத்துவங்கின. தற்போது பெய்த மழை பயிர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. இதனால், மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 73.69 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 73.69 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 2,150 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,300 கன அடி நீரும், வாய்க்காலில் 2,560 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 12.57 டி.எம்.சி.

## பருத்தி ஏற்றுமதியை தடை செய்க: காங்கிரஸார் வலியுறுத்தல்

பருத்தி ஏற்றுமதியை தடை செய்து விசைத்தறி தொழிலை பாதுகாக்க வேண்டும் என காங்கிரஸ் தேசியச் செயலாளர் திருநாவுக்கரசரிடம் ஞாயிற்றுக்கிழமை பல்லடம் காங்கிரஸார் கோரிக்கை மனு அளித்தனர்.

பல்லடத்திற்கு வந்த முன்னாள் மத்திய அமைச்சரும்,காங்கிரஸ் தேசிய செயலாளருமான திருநாவுகரசருக்கு வரவேற்பு அளித்து பல்லடம் நகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் தலைவர் ப.ஈஸ்வரமூர்த்தி, துணைத்தலைவர் எம்.மணிராஜ் ஆகியோர் கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது.

பருத்தி விலை உயர்வால் விசைத்தறி ஜவுளி உற்பத்தி தொழில் கடந்த 3 மாதமாக பாதிப்படைந்துள்ளது. பருத்தி 30 சதவீதம்  விலை உயர்ந்துள்ளது. நூல் விலையும் 10 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆனால் துணி விலை உயரவில்லை, இதன் காரணமாக தமிழகத்தில் விசைத்தறி ஜவுளி உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளது. இந்த வேலை குறைப்பால் லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

தரமான பஞ்சு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு பருத்தி கிடைப்பதில்லை. எனவே மத்திய அரசு பருத்தி ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும். விசைத்தறி தொழிலை பாதுகாக்க தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும், பல்லடத்தில் ஜவுளி சந்தை ஏற்படுத்த வேண்டும் என்று அம் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று திருநாவுகரசர் அவர்களிடம் உறுதி அளித்தார்.

## வறட்சி நிவாரணத் தொகை: பா.ஜ.க.வலியுறுத்தல்

சுல்தான்பேட்டை ஒன்றிய பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்று அப்பகுதி பாரதிய ஜனதா கட்சி வலியுறுத்தியுள்ளது.

கோவை மாவட்டம் சுல்தான்பேட்டை ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி செயல்வீரர்கள் கூட்டம் செஞ்சேரிமலை குலாலர் திருமண மண்டபத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றியத் தலைவர் எஸ்.தங்கவேல் தலைமை வகித்தார். மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் எம்.துரைசாமி முன்னிலை வகித்தார். ஒன்றியப் பொதுச்செயலாளர் பி.மணிகண்டன் வரவேற்றார்.

கூட்டத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்ட சுல்தான்பேட்டை ஒன்றியப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத்தொகை உடனடியாக வழங்க வேண்டும். ஒன்றியத்தில் உள்ள 73 கிராமங்களிலும் புதிய வாக்காளர்களை சேர்த்தல், கட்சி கொடிகம்பம், பெயர்பலகை நிறுவுதல் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கறிக்கோழி ரூ.45 முட்டை ரூ.3.36

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.45ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் செவ்வாய்க்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.50 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.36, சென்னையில் ரூ.3.36.

## சம்பா சாகுபடியை காப்பாற்ற கீழணைக்கு 3 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விட கே.பாலகிருஷ்ணன் எம்எல்ஏ கோரிக்கை

சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் வட்டங்களில் சம்பா நெல்பயிர்களை காப்பாற்ற கல்லணையிலிருந்து கீழணைக்கு விநாடிக்கு 3 ஆயிரம் கனஅடி நீரை திறந்துவிட வேண்டும் என தமிழக முதல்வருக்கு, மார்க்கிஸ்ட் கம்யூ கட்சி சட்டமன்ற கொறடாவான கே.பாலகிருஷ்ணன் எம்எல்ஏ (படம்) கோரிக்கை விடுத்து கடிதம் அனுப்பியுள்ளார்.

கடித விபரம்: கடலூர் மாவட்டம் சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் வட்டங்களில் போதிய நீரின்றி சம்பா நெல் பயிர்கள் காய்ந்து கருகி வருகிறது. குறிப்பாக பரங்கிப்பேட்டை, புவனகிரி ஒன்றியங்களில் முற்றிலும் பயிர்கள் காய்ந்து கருகி வருகின்றன. மேற்கண்ட பகுதிகளில் கடந்த ஆண்டு நீரினஅறி நெற்பயிர்கள் முற்றிலும் அழிந்தன. கல்லணையிலிருந்து கீழணைக்கு நீர் திறந்து விடுவதில் அதிகாரிகள் வேண்டுமென்றே இழுத்தடிப்பு செய்து வருகின்றனர்.

உதாரணமாக செப்டம்பர் முதல் அக்டோபர் 26-ம் தேதி வரை கீழணைக்கு வந்து சேர வேண்டிய 8 ஆயிரம் கனஅடி நீர் வந்து சேரவில்லை. மேட்டூர் அணையில் போதுமான அளவு நீர் உள்ள நிலையில் விதிப்படி கடலூர் மாவட்ட பாசனத்திற்கு அளிக்க வேண்டிய 10 சதவீத நீரை அளிக்க மறுப்பது சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் வட்ட விவசாயிகளை வஞ்சிப்பதாகும். எனவே தாங்கள் அவசரமாக தலையிட்டு நிலைமையை சீர்செய்திட வேண்டும். மேலும் வடகிழக்கு பருவமழை அடுத்த இரண்டு வாரத்தில் தொடங்க உள்ள நிலையில் காய்ந்து வரும் பயிர்களை காப்பாற்ற மேட்டூர் மற்றும் கல்லணையிலிருந்து நீரை திறக்க உத்தரவிட வேண்டும் என கே.பாலகிருஷ்ணன் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## அரசு மானியத்தில் 1,360 ஹெக்டேரில் சொட்டுநீர் பாசனம்: விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

திருநெல்வேலி மாவட்டத்தில் 1,360 ஹெக்டேரில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக ஆட்சியர் சி. சமயமூர்த்தி தெரிவித்தார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: திருநெல்வேலி மாவட்டத்தில் கிணறுகளில் நீர் இருப்பு குறைந்து வரும் நிலையில் பாசன நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்படி, சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. கடந்தாண்டு சிறு, குறு விவசாயிகளுக்கு அதிகபட்ச மானியமாக ரூ.43,816 வழங்கியது. நிகழாண்டு கூடுதலாக மானியம் வழங்கப்படும்.

காய்கனி பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அதிகபட்சம் ரூ.1,85,565 (2 ஹெக்டேருக்கு) வழங்கப்படும். நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தில் 1,360 ஹெக்டேருக்கு இலக்கு ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதில், 870 ஹெக்டேரில் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் பாசன வசதி ஏற்படுத்தித் தரப்படும். 218 ஹெக்டேரில் பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் பாசன வசதி ஏற்படுத்தித் தரப்படும். அதிகபட்சம் 5 ஹெக்டேருக்கு மானியம் வழங்கப்படும். சிறு, குறு விவசாயிகள் 2 ஹெக்டேர் பரப்பில் காய்கனி சாகுபடி செய்தால் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க ரூ.1,85,565, வாழை பயிருக்கு ரூ.1,23,441, மா அடர் நடவுக்கு ரூ.51,438, தென்னைக்கு ரூ.32,32, எலுமிச்சை, நெல்லிக்கு ரூ.44,387 வழங்கப்படும். அரசு அங்கீகாரம் பெற்ற 22 நிறுவனங்களின் மூலம் பாசன வசதியை செய்து கொள்ளலாம்.

மானியத்துக்கான விண்ணப்பத்துடன் அடங்கல், சிறு, குறு விவசாயிகளுக்கான சான்று, குடும்ப அட்டை, கணினி பட்டா, நில வரைபடம், நிறுவனத்தின் மதிப்பீடு ஆகியவற்றுடன் அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம்,

உதவி வேளாண்மை அலுவலகங்களை அணுகி பதிவு செய்து கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.

### பயிர் பாதுகாப்புக்கு ரூ. 1.75 கோடி ஒதுக்கீடு: திட்டக்குழுத் தலைவர்

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டத்தில் ஒருங்கிணைந்த பண்ணைகுட்டை மற்றும் பயிர்களை பாதுகாத்திடும் வகையில் தார்பாலீன் அமைத்திட ரூ.1.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட திட்டக் குழுத் தலைவரும், மாவட்ட ஊராட்சித் தலைவருமான என். சின்னத்துரை தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்ட திட்டக்குழுக் கூட்டம் அதன் தலைவர் என். சின்னத்துரை தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் முன்னிலை வகித்தார். ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெல்லா, திட்டக்குழுச் செயலர் கஸ்தூரி உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் மாவட்ட திட்டக்குழுத் தலைவர் என். சின்னத்துரை பேசியது:

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கயத்தாறு, கோவில்பட்டி, புதூர், விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம், உடன்குடி, சாத்தான்குளம் ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகள், மிகவும் பின்தங்கிய பகுதிகளாக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

சமச்சீர் வளர்ச்சி நிதி மூலம் முதல்கட்டமாக தூத்துக்குடி மாவட்டத்துக்கு மாநில திட்டமிடல் ஆணையகத்தின் மூலம் புதூர் வட்டாரத்தில் 10 மேம்படுத்தப்பட்ட பசுமைக் குடில்கள் ஒரு கோடியே 13 லட்சத்து 58 ஆயிரம் மதிப்பில் அமைத்து, குறுகிய நிலப்பரப்பில் ஆண்டு முழுவதும் அதிக விளைச்சலை ஏற்படுத்தி அப்பகுதி மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த முதல்வர் ஆணையிட்டுள்ளார். கோவில்பட்டி வட்டாரத்தில் தீப்பெட்டிக்கான உள் மற்றும் வெளி அட்டைப் பெட்டி தயாரிப்பதற்கு பொதுவான மையம் ரூ.45 லட்சம் மதிப்பில் அமைத்து அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும் முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இதேபோல, கோவில்பட்டி வட்டாரத்தில் ஆதரவற்ற பெண்கள் மற்றும் முதியோர்களுக்காக பெண்கள் பாதுகாப்பு மையம் ரூ.85.90 லட்சம் மதிப்பில் அமைக்கவும், விளாத்திகுளம் வட்டாரத்தில் ஆடுகள், கோழிகள், மண்புழு உரம் மற்றும் பண்ணை குட்டை ஆகியவைகள் மூலம் ஒருங்கிணைந்த பண்ணை அமைப்பது மற்றும் மழைக்காலங்களில் விளைவித்த பயிர்களை பாதுகாத்திட ஏழை விவசாயிகளுக்கு தார்பாலீன் வழங்கிடவும் ரூ.1.75 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

புதூர் வட்டாரத்தில், சாலை வசதி இல்லாத மடத்துப்பட்டி சாலை ரூ.1.60 கோடியில் மேம்பாடு செய்யவும், மாவட்டத்தில் 7 பணிகளுக்கு ரூ.5.27 கோடி மதிப்பில் அதிக பணிகள் மேற்கொள்ளவும் முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இந்தத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திட அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றார் அவர்.

## டெல்டா மாவட்டங்களில் குறைந்து வரும் கறவை மாடுகள்!

டெல்டா மாவட்டங்களில் தீவனப் பற்றாக்குறை, வேளாண்மையில் இயந்திர மயம் உள்ளிட்ட காரணங்களால் கறவை மாடுகளின் எண்ணிக்கை குறைந்து வருவது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் இந்தக் கணக்கெடுப்புப் பணி 2012-ம் ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கப்பட்டு அண்மையில் நிறைவடைந்துள்ளது.

இதில், தஞ்சாவூர் மாவட்டத்தில் 2007 ஆம் ஆண்டில் 4,74,904 ஆக இருந்த கறவை மாடுகளின் எண்ணிக்கை, தற்போது 3,92,346 ஆகக் குறைந்திருப்பது தெரிய வந்துள்ளது. இதில், பசு மாடுகளின் எண்ணிக்கை 3,80,781. எருமை மாடுகளின் எண்ணிக்கை 11,565.

ஆனால், 2007 ஆம் ஆண்டில் இருந்த பசு மாடுகளின் எண்ணிக்கையை (4,46,750) விட இப்போது 65,969 குறைவு. எருமை மாடுகளின் எண்ணிக்கை 28,154-லிருந்து 11,565 ஆகக் குறைந்துள்ளது.

அதாவது, எருமை மாடுகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 60 சதமாகவும், பசு மற்றும்

எருதுகளின் எண்ணிக்கை சுமார் 15 சதமாகவும் குறைந்துள்ளது.

நாகை மாவட்டத்தில் 2007 ஆம் ஆண்டில் 3,32,787 ஆக இருந்த கறவை மாடுகளின் எண்ணிக்கை இப்போது 2,68,494 ஆகக் குறைந்துள்ளது. மொத்தத்தில் 63,293 கறவை மாடுகள் குறைந்துள்ளன. இதில், எருமை மாடுகளின் எண்ணிக்கை மட்டும் 64 சதம் சரிந்துள்ளது. இதே நிலைமைதான் திருவாரூர் மாவட்டத்திலும் உள்ளதாகக் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்கள் தெரிவிக்கின்றனர். இதேபோல, ஆடுகளின் எண்ணிக்கையும் குறைந்திருப்பது கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் கால்நடைகளின் எண்ணிக்கை ஓரளவுக்கு அதிகரித்திருந்தாலும், 2007 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புடன் ஒப்பிடும்போது குறைவாகத்தான் இருக்கிறது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கத் துணைச் செயலர் திருப்பூந்துருத்தி பி. சுகுமாரன் தெரிவித்தது:ஆண்டுதோறும் கால்நடைகளின் எண்ணிக்கை சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது. சராசரியாக ஒரு கிராமத்தில் 10 முதல் 20 சதம் வரை குறைந்து கொண்டே வருகிறது.

உழவு மாடுகள் பெரும்பாலும் குறைந்துவிட்டன. விலையில்லா கறவை மாடுகள், ஆடுகளும் வழங்கப்படாமல் இருந்திருந்தால் இந்த எண்ணிக்கை மேலும் குறைந்திருக்கும் என்றார் சுகுமாரன்.

கால்நடைகளுக்கான தீவனப் பற்றாக்குறை, பராமரிப்பதற்கான ஆள்கள் பற்றாக்குறை உள்ளிட்டவையே எண்ணிக்கை குறைந்து வருவதற்குக் காரணம்.

குறிப்பாக, வைக்கோல் கட்டுகள் பெரும்பாலும் கேரள மாநிலத்துக்கு அனுப்பப்படுகின்றன. இதனால், ரூ. 30-40 என்ற அளவில் விற்கப்பட்ட வைக்கோல் கட்டின் விலை இப்போது ரூ. 100 - 150 ஆக உயர்ந்துள்ளது. இதேபோல, புல் கட்டுகளின் விலையும் பல மடங்கு அதிகரித்துவிட்டது.

ஒவ்வொரு கிராமத்திலும் கால்நடைகள் மேய்வதற்காக அரசு புறம்போக்கு நிலங்கள் இருந்தன. காலப்போக்கில் அவையெல்லாம் ஆக்கிரமிப்புகளால்

மறைந்துவிட்டன.

குறிப்பாக, நகரை ஒட்டியுள்ள கிராமங்களில் மேய்ச்சல் நிலங்கள் வீட்டு மனைகளாக மாறிவிட்டன. இதேபோல, நீர் நிலைகளும் ஆக்கிரமிப்பில் சிக்கியுள்ளன. கால்நடைகளின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துவிட்டதற்கு இதுவே பிரதான காரணம்.

தவிர, இறைச்சிக்காகவும் மாடுகள் மந்தை மந்தையாக கேரளத்துக்குக் கொண்டு செல்லப்படுவதும் தடுக்கப்படவில்லை.

### பருவ மழை குறைவு : ஏமாற்றத்தில் விவசாயிகள்...

புதுக்கோட்டை மாவட்டத்தில் போதிய பருவ மழை இல்லாததால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

தமிழகத்திலுள்ள தென் மாவட்டங்களில் புதுக்கோட்டை மாவட்டத்தின் சமூகப் பொருளாதார அமைப்பு விவசாயத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதனால் விவசாயம் மட்டுமே பிரதானத் தொழிலாக இதுவரை உள்ளது.

மாவட்டத்தின் மொத்த விவசாயப் பரப்பு சுமார் 1.40 லட்சம் ஹெக்டேர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அதில் 11, 200 ஹெக்டேர் காவிரி பாசனப்பகுதி உள்பட 96 ஹெக்டேரில் நெல் சாகுபடியாகிறது. இதில் 90 சத விவசாய நிலங்கள் நீர் ஆதாரத்துக்கு எவ்வித உத்தரவாதமும் இல்லாமல் மழை, நிலத்தடி நீரை மட்டுமே நம்பியுள்ளன. மாவட்டத்தில் ஏறத்தாழ 6000 கண்மாய்கள் உள்ள நிலையில், இவற்றிலிருந்து கிடைக்கும் நீர் ஆதாரமே மாவட்டத்தின் விவசாயத்துக்கு அடிப்படை.

அவற்றில் மிகப் பெரிய கண்மாய்களாக புதுக்கோட்டை கவிநாடு கண்மாய், ஆலங்குடி வல்லநாடு கண்மாய் ஆகியவை உள்ளன. மேலும், வெள்ளாறு, குண்டாறு, பாம்பாறு, அம்புலியாறு, கோரையாறு, சூறையாறு உள்ளிட்ட காட்டாறுகளும் ஆதாரமாக உள்ளன. இந்த மாவட்டம் பெரும்பாலும் வறட்சியைச் சந்திக்கும் நிலையிலேயே உள்ளது.

இந்நிலையில், தொண்டைமான் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் புதுக்கோட்டை

மாவட்டத்தின் நீர் ஆதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் காவிரி நீரைக் கொண்டு வரத் திட்டமிட்டனர். ஆனால் என்ன காரணத்தினாலோ அத்திட்டம் நிறைவேறாமல் போனது. நாடு விடுதலை அடைந்தபின் இந்திய அரசுடன் 1948-ல் புதுக்கோட்டை சமஸ்தானம் இணைக்கப்பட்டது முதலே, காவிரி நீரை இம்மாவட்டத்துக்கு கொண்டு வர வேண்டுமென வலியுறுத்தி இடதுசாரிகள் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள், விவசாய சங்கங்கள் இன்று வரை போராடியும் விடிவு பிறக்கவில்லை.

இதனால், விவசாயப்பணிகள் உத்தரவாதமில்லாத நிலைக்கு தள்ளப்பட்டு மழையை மட்டுமே நம்பியிருக்கும் நிலை ஏற்பட்டது. இச்சூழலில் நிகழாண்டுக்கான பருவ மழை எதிர்பார்த்த அளவில் இல்லாததால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

மாவட்டத்தின் மழையளவைப் பொறுத்தவரை ஆண்டு சராசரி மழை அளவு 919.4 மிமீ என்ற நிலையில், நிகழாண்டில் மாவட்டத்தில் இதுவரை 363 மிமீ மழை பதிவாகியுள்ளது. இது சாதாரண பொழிவு என்பதால் மாவட்டத்திலுள்ள 5,094 குளங்களில் போதியளவில் நீர் இருப்பு இல்லை. கடந்தாண்டில் 93 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இது மாவட்டத்தின் மொத்த விவசாயப் பரப்பளவில் சுமார் 60 சதமாகும். நிகழாண்டில் தென்மேற்கு பருவ மழை ஏமாற்றியது. வடகிழக்குப் பருவமழையை நம்பி மாவட்டத்தில் நேரடி மற்றும் நடவு மூலம் 62,500 ஏக்கர் (25,000 ஹெக்டேர்) பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆனால் கடந்த 3 வாரங்களாக மழையே இல்லாததால் நீர்நிலைகளில் தண்ணீர் வறண்டு போனதால், சாகுபடி செய்த பயிர்களின் கருகும் நிலை குறித்து விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் மு. மாதவன் கூறியது: தென்மேற்குப்பருவ மழை முழு அளவில் இம்மாவட்டத்தில் இல்லை. இதே நிலைமை நீடித்தால் கடந்தாண்டைப் போல வறட்சியின் பிடியில் சிக்கும் நிலை வந்துவிடும்.

கொத்தமங்கலம், ஆவுடையார்கோவில், அறந்தாங்கி உள்ளிட்ட பகுதிகளில் நேரடி விதைப்பில் உள்ள சுமார் 12 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர்கள் கருகத்

தொடங்கிவிட்டன. ஓரிரு நாட்களில் மழை கிடைத்தால் மட்டுமே இவை அனைத்தும் வீடு வந்து சேரும். இந்நிலையில், சுமார் 5 ஆயிரம் கோடியில் அறிவிக்கப்பட்டுள்ள காவிரி, வைகை, குண்டாறு இணைப்புத் திட்டத்தை தமிழக துரிதமாக நிறைவேற்றுவதுதான் நிரந்தரத் தீர்வாக அமையும் என்றார்.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் கூறியது:

கடந்தாண்டில் செப்டம்பர் வரை கிடைக்க வேண்டிய மழை 649 மிமீ -க்கு பதிலாக 363 மிமீ மழை மட்டுமே கிடைத்தது. கடந்த அக்டோபரில் 262 மிமீ மழை கிடைத்தது, அதே போல நிகழாண்டிலும் எதிர்பார்த்த மழை பொழிவு இருக்கும். அதனால் நிலைமை சரியாகிவிடும் என்றார்.

எனினும், மழை குறைந்தால், உணவு உற்பத்தியில் பெரும் பின்னடைவு ஏற்படும் என அச்சம் தெரிவிக்கின்றனர் விவசாயிகள். கடந்த 3, 4 வாரங்களாக அருகேயுள்ள மாவட்டங்களில் மழை வெளுத்துக்கட்டிவரும் சூழலில் புதுக்கோட்டை மாவட்டத்தில் வெறும் தூறல், கருக்கலுடன் மழை ஏமாற்றி வருகிறது.

## விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று குறைந்த வாடகையில் வேளாண் கருவிகள்

விவசாயப் பணிகளுக்கு வேளாண் பொறியியல் துறை வசமுள்ள வேளாண் கருவிகளை குறைந்த வாடகைக்கு விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என மாவட்ட வேளாண் துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட தகவல்:

குறைகேட்புக் கூட்டத்தில் விவசாயிகள் விடுத்த கோரிக்கையயடுத்து வெளியிடப்பட்ட வாடகைக்கு விடப்படும் கருவிகள் குறித்த விவரம்:

நிலமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மண் தள்ளும் இயந்திரம் - ஒரு மணி நேரத்துக்கு ரூ. 910 வாடகை.

உழுவை இயந்திரம் - ஒரு மணி நேரத்துக்கு ரூ. 370 வாடகை. ஒருங்கிணைந்த நெற்கதிர் அறுவடை இயந்திரம் - ஒரு மணி நேரத்துக்கு ரூ. 910.

சிறுபாசனத் திட்டத்தின் கீழ்,விசைத் துளைக் கருவி - 8 இன்ச் விட்டமுள்ள

ஆழ்குழாய்க் கிணறு அமைத்திட ஒரு மீட்டர் ஆழம் துளையிட ரூ. 130. நிலத்தடி நீர் மட்டம் அறிய புவியியல் ஆய்வு செய்ய விவசாயப் பணிக்கு ஒரு ஆய்வுக்கு ரூ.500-ம் இதர பணிகளுக்கு ஒரு ஆய்வுக்கு ரூ.1000-ம் வாடகை அளிக்க வேண்டும்.

ஆழ்குழாய்க் கிணறு சுத்தப்படுத்தும் காற்றழுத்தக் கருவி ரூ. 250 -க்கு (1 மணி நேரம்) வாடகைக்கு கிடைக்கும்.

மானியத்தில் வேளாண் கருவிகள்:

எனவே, விவசாயிகள் தங்கள் தேவைக்கு புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும், மேலும், விவரங்களுக்கு செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை) புதுக்கோட்டை அலுவலகத்தை 04322-221816 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

### சீர்காழியில் கருகும் சம்பா பயிர்: விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

கருகி வரும் சம்பா பயிரைக் காப்பாற்ற தண்ணீர் கேட்டு சீர்காழி பொதுப் பணித் துறை அலுவலகம் முன் விவசாயிகள் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சீர்காழி, கொள்ளிடம், வைத்தீஸ்வரன்கோயில், திருவெண்காடு உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் உள்ளன. இவற்றில் 30 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக சம்பா நடவுப் பணிகளுக்கு நாற்றுவிடப்பட்டுள்ளது.

மேட்டூரிலிருந்து கடந்த ஆகஸ்ட் 2-ம் தேதி திறந்துவிடப்பட்ட தண்ணீர் கடைமடை பகுதிகளுக்கு போதிய அளவு வந்து சேராததால், நாற்றுவிட்டு முளைத்த பயிர்கள் கருகி வருகின்றன.

இந்த நிலையில், சீர்காழியில் உள்ள கழுமலையாறு, பாப்பான்ஓடை, பழவாறு, திருநகரி வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்கங்களைச் சேர்ந்த 100-க்கும் அதிகமான விவசாயிகள், தண்ணீரின்றி கருகி வரும் சம்பா பயிரைக் காப்பாற்ற

உடனடியாக வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிட வலியுறுத்தி, சீர்காழி பொதுப் பணித் துறை அலுவலகம் முன் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## பரமத்தி வேலூரில் பூக்களின் விலை உயர்வு

பரமத்தி வேலூர் பூ ஏலச் சந்தையில் பூக்களின் விலை உயர்ந்துள்ளதால், பூக்கள் பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் வட்டம், பரமத்தி, செங்கப்பள்ளி, பொய்யேரி, கரசபாளையம், கொளக்காட்டுப்புதூர், அண்ணாநகர் மற்றும் கரூர் மாவட்ட சேமங்கி, வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் பூக்கள் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பகுதிகளில் விளையும் பூக்கள் பரமத்தி வேலூரில் நடைபெறும் தினசரி ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படுகின்றன.

ஜேடர்பாளையம், கபிலர் மலை, பாண்டமங்கலம், வேலூர், கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் ஏலம் எடுப்பதற்காக வந்து செல்கின்றனர்.

கடந்த வாரம் குண்டுமல்லி கிலோ ஒன்று ரூ.200-க்கும், சம்மங்கி கிலோ ரூ.60-க்கும், சென்டுமல்லி கிலோ ரூ.100-க்கும், அரளி கிலோ ரூ.80-க்கும், கோழிக்கொண்டை கிலோ ரூ.40-க்கும் ஏலம் போனது.

செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற ஏலத்தில் குண்டுமல்லி கிலோ ரூ.300-க்கும், சம்மங்கி கிலோ ரூ.200-க்கும், சென்டுமல்லி ரூ.170-க்கும், அரளி கிலோ ரூ.100-க்கும், கோழிக்கொண்டை கிலோ ரூ.60-க்கும் ஏலம் போனது.

தற்போது புரட்டாசி மாதத்தை முன்னிட்டு, நவராத்தி கொலு வைத்து மக்கள் வழிபாடு நடத்தி வருவதால், பூக்களின் விலை உயர்ந்துள்ளதாகவும், இன்னும் சில தினங்களில் மேலும் விலை உயர்வதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

## குமாரபாளையத்தில் பலத்த மழை

குமாரபாளையம், அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை மாலை பெய்த பலத்த மழையால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கடந்த சில நாள்களாக பகல் நேரங்களில் கடுமையான வெயில் வாட்டி வந்தது. மேலும், மேட்டுப்பாங்கான பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நிலக்கடலை, சோளம் மற்றும் மானாவாரி பயிர்கள் கருகி வந்தன. இதனால், விவசாயிகள் வேதனையில் தவித்து வந்தனர். இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை மாலை முதலே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டு வந்தது.

தொடர்ந்து, பலத்த காற்று, இடி மின்னலுடன் பெய்யத் தொடங்கிய மழை இரவும் நீடித்தது. பலத்த மழையால் குமாரபாளையம் சேலம் பிரதான சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. கழிவுநீர் வாய்க்கால்கள் நிரம்பி வெளியேறியதால் பாதசாரிகளும், வாகன ஓட்டிகளும் அவதிக்குள்ளாகினர்.

## கமுதியில் திடீர் மழை

கமுதியில் செவ்வாய்க்கிழமை மாலையில் திடீரென மழை பெய்தது.

கமுதி பகுதியில் கடந்த ஒன்றரை மாதமாக மழையே பெய்யாமல் கடும் வெயில் அடித்து வந்தது. மழை இல்லாததால் விவசாயம் பாதிப்படைந்தது. குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. மழை பெய்ய வேண்டி, கமுதி பகுதி ஆலயங்களில் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை, கமுதி பகுதியில் இடி, மின்னலுடன் திடீரென்று பலத்த மழை பெய்தது. இந்த மழையால் தெருக்களிலும், சாலைகளிலும் த ண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதேபோல் தொடர்ந்து மழை பெய்தால்தான் விவ சாயத் தொழில்களைத் தொடங்க முடியும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

கமுதியில் மழை பெய்திருந்தாலும் பக்கத்து ஊர்களான பேரையூர், அபிராமம், பெருநாழி உள்ளிட்ட ஊர்களில் மழைத்தூறல் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## தமிழகத்துக்கு கிருஷ்ணா நீர்வரத்து குறைந்தது

தமிழகத்துக்கு வரும் கிருஷ்ணா நீரைத் தடுத்து நிறுத்தி தெலங்கானா எதிர்ப்பு அமைப்பினர் போராட்டம் நடத்தியதால், பூண்டி ஏரிக்கு நீர்வரத்து குறைந்துள்ளது.

இதனால் தமிழகத்துக்கு கிருஷ்ணா நீர் வரத்து விநாடிக்கு 16 கன அடி குறைந்துள்ளது. ஆந்திரத்தில் தெலங்கானா எதிர்ப்புப் போராட்டம் வலுவடைந்து வருகிறது. போராட்டத்தின் ஒரு பகுதியாக ஒருங்கிணைந்த ஆந்திர பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்தவர்கள் திங்கள்கிழமை காளஹஸ்தி அருகே தொட்டம்பேடு பகுதியில் கிருஷ்ணா கால்வாய் மதகுகளை மூடும் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணி நேரம் கால்வாய் மதகுகளை அடைத்து அவர்கள் போராட்டம் நடத்தினர். அப்போது மத்திய அரசு மற்றும் ப.சிதம்பரத்துக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். இது குறித்து தகவல் அறிந்து வந்த பொதுப்பணித் துறையினர் போலீஸ் உதவியுடன் கால்வாய் மதகுகளைத் திறந்து விட்டனர்.

இந்தப் போராட்டத்தால் தமிழகத்துக்கு வரும் கிருஷ்ணா நீர் ஒரு மணி நேரம் தடைபட்டது.

இதனால் பூண்டி ஏரிக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. திங்கள்கிழமை காலையில் விநாடிக்கு 101 கன அடி தண்ணீர் பூண்டிக்கு வந்தது. போராட்டம் காரணமாக செவ்வாய்க்கிழமை நீர்வரத்து விநாடிக்கு 85 கன அடியாகக் குறைந்தது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 09.10.2013

### விவசாய மலர்

### பசுமையான பண்ணை விவசாயி பரிசித்துராசா



மதுரை - சோழவந்தான் ரோட்டில் 50 ஏக்கர் நில பரப்பில் பல்வேறு ரக தென்னைக் கன்றுகளை பழமை விவசாயி பரிசித்துராசா, 65, வளர்த்து வருகிறார். இவரது பண்ணையில் செவ்வல் தென்னை, நாட்டுதென்னை, ஒட்டுத்தென்னை உள்ளிட்ட வகைகள் உள்ளது. செவ்வல் தென்னை கன்றுகள் இரண்டரை அல்லது 3 ஆண்டுகளில் பலன் தரக்கூடியது. ஒரு மரத்திற்கு 80க்கு மேற்பட்ட காய்கள் அதிகமாக காய்க்கின்றன. இளநீர்... இனிப்பு கலந்த ருசியாக உள்ளது. ஒரு கன்று ரூ.100 க்கு விற்கப்படுகிறது. அதுமட்டுமல்ல பண்ணையில் கற்பூரவல்லி, பச்சைவாழை, திசுவாழை, முப்பட்டை வாழை போன்ற வாழை ரகங்களும் உள்ளன. அதில் ஒரு திசுவாழை தாரில் அபூர்வமாக 20 சீப்பில் 400 காய்கள் பருத்து பெரிதாக விளைந்துள்ளன. மரங்களை அதிகளவில் வளர்ப்பதன் மூலம் மழை பெய்வதற்கான மாற்றத்தை ஏற்படுத்துவதில் அக்கறை காட்டி வருகிறார்.

விவசாயி பரிசித்துராசா கூறுகையில், ""விவசாயம், எங்கள் குலத்தொழில்.

தென்னை சாகுபடியில் மட்டுமல்ல நெல், வாழை, கரும்பு சாகுபடியில் கூடுதல் மகசூல் கிடைப்பதை வைத்து வாழ்க்கை நடக்கிறது. லயன்ஸ் சங்க நிர்வாகியாக இருந்தபோது ஜப்பான், ஹாங்காங், தாய்லாந்து, அமெரிக்கா, இலங்கை போன்ற நாடுகளுக்கு சுற்றுலா சென்றேன். அங்கெல்லாம் தென்னைகள் இல்லை. அழகுக்கு சில இடங்களில் காணலாம். தாய்லாந்தில் பச்சைநிற தென்னை அதிகமாக விளைகிறது. இருந்தாலும் நம் தமிழகத்தில் வளரும் சுவையான தென்னைக்கு ஈடாகாது," என்றார்.

"மரங்களை வளர்ப்போம், மழையை பெறுவோம்' என்ற அடிப்படையில் வீட்டிற்கு ஒரு மரக்கன்றுகளை வளர்க்க 99654 47274ல் அழைக்கலாம்.

### சின்ன சின்ன செய்திகள்



**த.வே.ப.க. தென்னை ஏ.எல்.ஆர்.(சி.என்)3:** இளநீருக்கு ஏற்ற சுவையுடையது. அதிக பொட்டாசியம் சத்து அடங்கிய புதிய தென்னை ரகம். ஈரியோபைட் சிலந்தியைத் தாங்கி வளரும் திறனுடையது. 3 ஆண்டுகளில் பூக்கம். நடவு செய்ய ஆனி - ஆடிப்பட்டம், மார்கழி-தைப் பட்டம் ஏற்ற பருவங்களாகும். சராசரி விளைச்சல். ஒரு ஆண்டுக்கு ஒரு மரம் 86 காய்கள் காய்க்கும். அதிக அளவு விளைச்சலாக ஒரு ஆண்டுக்கு ஒரு மரம் 121 காய்கள் காய்க்கும். தமிழகத்தில் பாசன வசதியுடைய அனைத்து மாவட்டங்களுக்கும் ஏற்றது. தொடர்புக்கு: 04253-288722.

<u>த.வே.ப.க. பால்காளான் கோ (டி.ஜி)3:</u> சாதாரண சூழ்நிலையில் 3 நாள் வைத்து பயன்படுத்தலாம். குளிர்சாதனப் பெட்டியில் வைத்து5 முதல் 6 நாட்கள் பயன்படுத்தலாம். இக்காளானில் நார்ச்சத்து 20.71 சதம், புரதம் 32.9 சதம், மாவுச்சத்து 11.8 சதம், சாம்பல் சத்து 8.32 சதம் ஆகியவை அடங்கியுள்ளது. வயது

45 முதல் 50 நாட்கள். பருவம்: வருடம் முழுவதும். சராசரி ஒரு கிலோ உலர்ந்த வைக்கோலிலிருந்து 1.60 கிலோ காளான் கிடைக்கும். அதிக அளவு விளைச்சலாக ஒரு கிலோ உலர்ந்த வைக்கோலிலிருந்து 1.76 கிலோ காளான் கிடைக்கும். தமிழகத்தின் சமவெளி பகுதிகள் அனைத்து மாவட்டங்களிலும் உற்பத்தி செய்யலாம். தொடர்புக்கு: 0422-661 1240.

த.வே.ப.க. கரும்பு சி.8: நடு, பின் பட்டத்திற்கேற்ற சிறந்த ரகமாகும். அதிக சர்க்கரை சத்து 13 சதம். பருமனான நிமிர்ந்த கரும்பு. இக்கரும்பு சுனையற்றது. தோகை மிக எளிதில் உரிக்கலாம். இயந்திரம் மூலம் அறுவடைக்கும் உகந்த ரகமாகும். வறட்சி மற்றும் அதிக நீர்த்தேக்கத்தை தாங்கும் திறனுடையது. செவ்வழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது. களர்நிலத்தில் நன்றாக வளரக்கூடிய ஒரு சிறந்த கரும்பு ரகம். வயது 330 நாட்கள். பருவம் - நடு மற்றும் பின்பட்டம் (பிப்ரவரி முதல் மே வரை). விளைச்சல்-146 டன்கள்/எக்டர். (மறுதாம்பு 135 டன்கள்/எக்டர்). அதிக விளைச்சலாக எக்டருக்கு 187 டன் கரும்பு மகசூல் தரும். உகந்த மாவட்டங்கள் - கரும்பு சாகுபடி செய்யும் அனைத்து மாவட்டங்களுக்கும் ஏற்றது. தொடர்புக்கு: 0431-261 4217.

கரும்பு ஆராய்ச்சி நிலையங்கள்: 1. வேலூர் மாவட்டம் குடியாத்தம், 04171-222 0275. 2. கடலூர், 04142-220 630, 3. திருச்சி மாவட்டம், சிறுகமலை, 0431-261 4217.

**தென்னைக்கு ஏற்ற இணைப்பயிர் பலா மரம்:** செம்மண் நிலம், வண்டல், மணல் கலந்த நிலம், மணற்பாங்கான நிலம் ஆகியவற்றில் பலா நன்றாக வளரும். தண்ணீர் தேங்காத வடிகால் வசதியுடைய தென்னந்தோப்புக்களில் பலாவை இணைப்பயிராக சாகுபடி செய்யலாம். புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆலங்குளம் அணவயல் போன்ற பல கிராமங்களில் தென்னந்தோப்பில் பலா சிறந்த பணம் கொழிக்கும் பயிராக பயிரிடப்பட்டு வருகிறது. பலா வெப்பமண்டலப் பயிர் மரமாகும். சதுர முறையில் 25 x 25 அடி இடைவெளியில் நடவு செய்யப்பட்டுள்ளன. இளம் தென்னந்தோப்பு அல்லது வளர்ந்த தோப்புகளிலும், பலாக்கன்றுகளை இணைபயிராக நடலாம். ஏக்கருக்கு சுமார் 70-80 தென்னை நடப்பட்டுள்ள வயலில் எந்த ஒருநான்கு மரங்களுக்கு நடுவிலும் ஒரு பலாக்கன்று வீதம் ஏக்கரில் சுமார் 50 கன்றுகள் நடவு செய்யலாம். (தகவல்:

பி.ஹரிதாஸ், விதைச்சான்று உதவி இயக்குநர், கடலூர்).

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## மல்லிகை விவசாயிகள் கவனத்திற்கு



மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் விவசாயிகள் சிறப்பாக மல்லிகை சாகுபடி செய்து விமானங்கள் மூலம் ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

உங்கள் மல்லிகைப் பயிரில் பூ மொட்டுகள் பழுப்பு நிறமடைந்திருக்கின்றனவா? பாதித்த மலர் கொத்துக்களை வளைத்து ஒரு வெள்ளை நிற அட்டையில் தட்டுங்கள். உற்று நோக்கினால், மிகச்சிறிய மெலிந்த பழுப்பு மற்றும் மஞ்சள் நிற பூச்சிகள் விரைந்து நகர்வதைக் காணலாம். இப்பூச்சிகள் மலர்ப்பேன்கள் எனப்படும். இப்பூச்சிகளின் தாக்குதலால் பூ மொட்டுகள் வெண்மை நிறம் மாறி பழுப்பு நிறமடையும். மலர்க்காம்புகள் சிறுத்துவிடும். மேலும் மலர்ப்பேன் தாக்கிய மொட்டுகள் மலர்ந்து விரிவதில்லை. எனவே இவை சந்தையில் குறைந்த விலைக்கே போகும்.

தெளிப்புநீர் பாசன முறையில் பாசன வசதிபெறும் மல்லிகைப் பயிரில் மலர்ப்பேன் தாக்குதல் மிகக் குறைந்து காணப்படும்.

சமச்சீரான அளவில் பரிந்துரைக்கப்படும் விகிதத்தில் உரங்கள் இடப்பட்ட பயிர் பூச்சிகளின் சேத்தினை தாங்கி வளர இயலும். மல்லிகை பயிருக்கு ஆண்டுக்கு இரு தடவையாக அதாவது கவாத்து செய்தவுடன் ஒரு முறையும், ஜூன், ஜூலை மாதங்களில் மறுமுறையுமாக இரு தடவைகளாக கீழ்க்கண்ட உரங்களைப் பிரித்து இடவேண்டும். செடி ஒன்றுக்கு நன்கு மக்கிய தொழு உரம் பத்து கிலோ, தழைச்சத்து 60 கிராம் (யூரியா 130 கிராம்), மணிச்சத்து 120 கிராம் (சூப்பர்

பாஸ்பேட் 750 கிராம் அல்லது ஸ்பிக் டி.ஏ.பி.300 கிராம்), சாம்பல் சத்து 120 கிராம் (மியூரியேட் ஆப் பொட்டாஷ் 200 கிராம்) வீதம் தேவை.

வசதிப்படும் இடங்களில் தெளிப்புநீர் பாசன முறையில் (ஸ்பிரிங்க்ளர் இர்ரிகேஷன்) வறண்ட வெப்பமான மாதங்களில் மட்டும் பாசனம் ஏற்படுத்தலாம்).

மலர்ப்பேன் தாக்குதல் தீவிரப்பட்டால் மோனோகுரோட்டோபாஸ் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மில்லி கலந்து கைத்தெளிப்பான் கொண்டு பயிர் முழுவதும் நனையும்படி மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். மேலும் மருந்து கரைசல், பயிரில் குறிப்பாக பூங்கொத்துக்களில் நன்கு படுவதற்காக, வேளாண்மைக்கான திரவ தெளிப்புகளில் (சாண்டோவிட், ஸ்டிக்கால், அக்ரோவெட், ஹைவெட் பைட்டோவெட், இண்ட்ரான் - வணிகப் பெயர்கள்) ஒன்றினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு கால் மில்லிவீதம் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் ஒரு வார இடைவெளியில் மீண்டும் மருந்து தெளிக்க வேண்டும்.

<u>செஞ்சிலந்தி தாக்குதல்:</u> பாதிப்பு முதலில் முதிர்ந்த இலைகளில் தோன்றி பின்னர் இளம் இலைகளுக்கு பரவும். மஞ்சள் நிறப்புள்ளிகளை போல் இலைகளின் மேற்புறம் ஏற்படும். பாதிக்கப்பட்ட இலை களின் பின்புறத்தினை உற்றுநோக்கினால் மெல்லிய நூலாம்படையும் அதனுள் சிவப்பு நிற சிறிய பூச்சிகள் மெதுவாக நகர்வதையும் காணமுடியும்.

உருப்பெருக்கி கொண்டு பார்த்தால் அப்பூச்சிகள் எட்டுக்கால்கள் கொண்டனவாக இருப் பதினைக் கவனிக்க இயலும். இப்பூச்சிகள் செவ்வுண்ணி என்றும் அழைக்கப்படும். தாக்குதல் தீவிரப்பட்டால், இலைகள் முற்றிலும் வெளுத்து காய்ந்து கீழே உதிர்ந்துவிடுகின்றன. வறண்ட வெப்பமான சூழ்நிலையில் செஞ்சிலந்தி தாக்குதல் குறையும். செஞ்சிலந்திப் பூக்களைக் கட்டுப்படுத்த, ஒரு லிட்டர் தண்ணீருக்கு மூன்று கிராம் வீதம் நனையும் கந்தகம் மருந்தினைக் கரைத்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். தேவைப்பட்டால், பதினைந்து நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்க வேண்டும். பயிரின் வளர்ச்சியினைப் பொறுத்து ஏக்கருக்கு 200 முதல் 300 லிட்டர் வரை மருந்துக் கரைசல் தேவைப்படலாம். இலையின் அடிப்புறமும் படும்படி தெளிக்கவேண்டும்.

**எம்.ஞானசேகர்,**

**விவசாய ஆலோசகர்,**

**97503 33829.**

## சுரண்டையில் வாழை இலை விலை "கிடு கிடு"

சுரண்டை : சுரண்டையில் வாழை இலை விலை கிடு கிடுவென உயர்ந்ததால் ஓட்டல் மற்றும் விசேஷ வைபவங்களுக்கு வாழை இலைக்குப் பதிலாக பிளாஸ்டிக் சருகை, மற்றும் பேப்பர் இலைகள் உபயோகப்படுத்தப்படுவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் ‹ழல் உருவாகியுள்ளது. சுபவைபவங்கள், கோயில், அன்னதானம் மற்றும் ஓட்டல்களில் அத்தியாவசியமாக தேவைப்படுவது வாழைஇலை ஆனால் இந்த இலையின் விலை ஒரே நிலையில் நில்லாமல் தாறுமாறாக மலைபோல் உயர்வதால், மார்க்கெட்டில் வாழை இலை வாங்க வரும் வியாபாரிகள் பொதுமக்கள் ஓட்டல் நடத்துவோர் என பலதரப்பினரும் இலை விலை கேட்டு தலை தெறிக்க ஓட்டம் பிடிக்கும் அவல நிலைக்கு ஆளாகி வருகின்றனர். குறிப்பாக கடந்த ஒரு மாதத்திற்கு முன் 200 இலைகள் கொண்ட 1 கட்டு ரூ 100க்கு விற்கப்பட்டது. இதனால் 5 இலை கொண்ட 1 பூட்டு எனப்படும் இலையும் விலை குறைந்து ரூ. 3ற்கு விற்பனை செய்யப்பட்டது. இதனால் இலை வியாபாரம் அதிகரித்ததோடு, சுபவைபவங்கள் மற்றும் ஓட்டல்களில் நல்ல இலை போட்டு நாவிற்கினிய உணவினை பொதுமக்கள் உண்டு வந்தனர். இந்நிலையில் தற்போது இதன் விலை கிடுக்கிடுவென உயர்ந்து 200 இலை கொண்ட 1 கட்டு ரூ. 500 என 5 மடங்கு விலை அதிகரித்து 5 இலை கொண்ட ஒரு பூட்டு ரூ 12 எனவும் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் முக்கிய விசேஷங்கள், மற்றும் ஓட்டல்களில் பிளாஸ்டிக் சருகைகளும், பேப்பர் இலைகளும் உபயோகப்படுத்தப்படுகின்றன. இதனால் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படும் ‹ழல் உருவாகியுள்ளது. இது குறித்து வாழை இலை வியாபாரிகள் கூறும்போது கடும் வறட்சி காரணமாக வாழை இலை உற்பத்தியில் இலை வரவும் குறைந்ததே விலை ஏற்றத்திற்கு காரணம் என வேதனை தெரிவித்தனர்.

## முருங்கைக்காய் விலை உயர்வு : ஒரு கிலோ ரூ.41

ஒட்டன்சத்திரம் : வரத்து குறைவால், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் முருங்கைக்காய் விலை உயர்ந்து, கிலோ ரூ.41 க்கு விற்றது.ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுப்புற கிராமங்கள், தாராபுரம், ஆண்டிபட்டி பகுதிகளில் விளையும் செடி முருங்கைக்காய்கள் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படும்.அப்பகுதியில் நிலவும் வறட்சியால், விளைச்சல் இன்றி, கடந்த சில நாட்களாக மார்க்கெட்டிற்கு முருங்கைக்காய் வரத்து, குறைந்தது. இதனால், விலை உயர்ந்து வருகிறது. கடந்த வாரம் வரை கிலோ ரூ.20 க்கும் கீழ், விற்பனையான முருங்கைக்காய், இந்த வாரம் தினமும் 3 ரூபாய் வீதம் அதிகரித்து, நேற்று ரூ.41 க்கு விற்பனை ஆனது.வியாபாரி கார்த்தி கூறுகையில்,"" மழை இல்லாததால், விளைச்சல் குறைந்து, மார்க்கெட்டிற்கு முருங்கைக்காய் வரத்து குறைந்து கொண்டே வருகிறது. இந்நிலை நீடிக்கும் பட்சத்தில், முருங்கை விலை மேலும் உயர வாய்ப்புள்ளது, என்றார்.

## பாரம்பரிய நெல் விதைகள் வழங்கல்

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் விதை வழங்கும் விழா நடந்தது. சிவகங்கை பல்நோக்கு சமூக சேவை சங்க பாதிரியார் சவரிமுத்து தலைமை வகித்தார். உதவி செயலாளர் ஜஸ்டின் திரவியம் முன்னிலை வகித்தார். "அட்மா' திட்ட தொழில் நுட்ப வல்லுனர் ஏகாம்பரம் கூறியதாவது: கிராமம்தோறும் விதை வங்கி உருவாக்கும் வகையில், இதுபோன்ற பாரம்பரிய விதை பரிமாற்றம் நடைபெற்று வருகிறது. எங்களுக்கு, விவசாயிகளுடனான உறவு, மேலும், மேம்பட வாய்ப்புள்ளது," என்றார்.

## விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு 155 டன் விதைகள் விற்க தடை

ராமநாதபுரம் : ஆர்.எஸ்., மங்கலம், திருவாடானை தாலுகாவிற்குட்பட்ட விதை விற்பனை நிலையங்களில், விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமாறன் தலைமையில் அதிகாரிகள் ஆய்வு நடத்தினர். நடப்பாண்டு 582 விதை விற்பனை

நிலையங்களில் ஆய்வு பணி மேற்கொள்ளப்பட்டு, 663 விதை மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இதில் 37 விதை மாதிரிகள், தரம் குறைபாடு கண்டறியப்பட்டு 60 லட்ச ரூபாய் மதிப்பிலான 155 டன் விதைகளை, விற்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதில் தொடர்புடைய உற்பத்தியாளர்கள், வினியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. துணை இயக்குனர் கூறியதாவது: மாவட்டத்தில் விதை விற்பனையாளர்கள் தரமான, இனத்தூய்மையான, சுத்தமான, பிற ரக கலப்பு இல்லாத விதைகளை, விவசாயிகளுக்கு விற்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. நெல் விதைகள் 80 சதவீதம், முளைப்பு திறன் இருக்க வேண்டும். விவசாயிகளுக்கு, பில் வழங்க வேண்டும். பரமக்குடி விதை பரிசோதனை நிலையத்திற்கு, விதை மாதிரிகள் அனுப்பி, சோதனை செய்து கொள்ள வேண்டும், என்றார். வேளாண்மை உதவி இயக்குனர் கமால்தீன், விதை ஆய்வாளர் மருதுபாண்டியன் உடனிருந்தனர்.

## 4 கால்களுடன் கோழி குஞ்சு

ராமநாதபுரம் : ராமநாதபுரம் அரண்மனை மேலத்தெருவை சேர்ந்தவர் மூர்த்தி, 56. இவரது, பண்ணையில் நேற்று முன்தினம் ஒரு நாட்டுக்கோழி குஞ்சு, நான்கு கால்களுடன் பிறந்தது. மூர்த்தி கூறுகையில், ""20 ஆண்டுக்கும் மேலாக நாட்டுக் கோழிகளை வளர்த்து வருகிறேன். நான்கு கால்களுடன் பிறந்த கோழிக்குஞ்சை பார்த்ததில்லை. இதை கவனமாக பாதுகாத்து வருகிறேன்," என்றார்.

## பயிரை காப்பாற்ற மானியத்தில் ஆயில் மோட்டார்

சிங்கம்புணரி : சிங்கம்புணரி வட்டார விவசாயிகளுக்கு வறட்சியில் பயிரை காப்பாற்ற மானிய விலையில் ஆயில் மோட்டார் வழங்கப்படுகிறது. இப்பகுதியில் கடந்த ஆண்டு மழையின்றி விவசாயம் அடியோடு பாதித்தது.இந்தாண்டு குறைந்த அளவு மழையை வைத்து விவசாயிகள் மானவாரி நெல் நடவு செய்தனர். மழையின்றி பல இடங்களில் பயிர்கள் கருகி வருகின்றன.பயிரை காப்பாற்ற திறந்த வெளி கிணறு, பண்ணைக்குட்டை அமைத்துள்ள விவசாயிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் ஆயில் மோட்டாருக்கு ரூ. 10 ஆயிரம் மானியம்

வழங்கப்படும் என வேளாண் உதவி இயக்குனர் சர்புதீன் அகமது தெரிவித்துள்ளார்.

## மழையில்லாததால் புற்கள் கருகும் அவலம் : திருப்புத்தூரில் "தொடரும்' வறட்சி

திருப்புத்தூர் : திருப்புத்தூர் வட்டாரத்தில் இந்தாண்டும் போதிய மழையில்லாததால்,புற்களும் கருகி விட்டன. கடந்தாண்டை விட நெல் விளைச்சல் வெகுவாக குறையும் வாய்ப்பு உருவாகி விட்டதாக விவசாயிகள் கவலையில்உள்ளனர். திருப்புத்தூர் வட்டாரத்தில் கடந்த சில வாரங்களாக மழை பெய்வது நின்று,சித்திரை அக்னி நட்சத்திரத்தைப் போல,உச்சக்கட்டமாக வெயில் அடிக்கத் துவங்கி விட்டது. மண்ணில் இருந்த ஈரத்தன்மை முற்றிலுமாக குறைந்து விட்டது. சிறிது மழையால், செழித்திருந்த பூமி வறண்டு, பசுமையாகக் காணப்பட்ட புற்களும் காய்ந்து கருகத் துவங்கி விட்டன. கடந்த மாதம் பெய்த மழையை நம்பி, பரவலாக விவசாயிகள் நாற்றங்காலில் நெல் விதைத்திருந்தனர். நன்கு வளர்ந்த நாற்றுக்களை 25-30 நாட்களுக்குள் நட வேண்டும். தற்போது நடவேண்டிய நிலையில்,மழை இல்லாததால், விவசாயிகள் வயல்களில் நடவுப் பணியில் ஈடுபட முடியாமல் கவலையில் உள்ளனர். நாற்றுக்களும் கருகத் துவங்கியுள்ளன. சுமார் 2500 ஏக்கரில் நாற்றுப்பாவ தயாராக நாற்றுக்கள் இருந்தும், தண்ணீர் இல்லாததால் நடமுடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். சுமார் 200 ஏக்கரில் மட்டும்,கிணறு பாசனம் உள்ள விவசாயிகள் நாற்றுக்களை பாவி வருகின்றனர். விவசாயிகள்,கருகிய நாற்றுக்களுடன் வேளாண் அலுவலகங்களுக்கு சென்று முறையிடுகின்றனர். அலுவலர்களோ செய்வதறியாது, பதிலளிக்க முடியாமல் உள்ளனர். அடுத்த 10 நாட்களில் மழை பெய்யா விட்டால் முற்றிலுமாக, நாற்று கருகி விடும். முற்றிய நாற்றுக்களை நட்டாலோ,அல்லது அப்படியே விட்டாலும், திட்டமிட்ட விளைச்சல் கிடைக்க வாய்ப்பில்லை. இதனால் விவசாயிகள் குறைந்த நஷ்டத்தைச் சந்திக்க நேரிடும். சென்ற ஆண்டு பருவமழை பொய்த்து, வறட்சியைச் சந்தித்தும், விவசாயிகள், ஏதோ ஒரு நம்பிக்கையில், இந்த ஆண்டு, இருந்த பணத்தை செலவழித்து நாற்றங்காலில் விதைத்தனர். ஆனால் பயனில்லாமல்

போய்விடுமோ? என்ற கவலையில் உள்ளனர். திருப்புத்தூர் வட்டாரத்தில், நல்ல மழை பெய்தால்,அதிகபட்சமாக 17 ஆயிரம் ஏக்கர் விளைச்சல் காணப்படும். கடந்த 2011ம் ஆண்டில் இப்பகுதியில் சுமார் 15 ஆயிரம் ஏக்கரில் நெல் விளைச்சல் கிடைத்தது. கடந்த ஆண்டில் பருவமழை தவறி பெய்ததால், 8 ஆயிரம் ஏக்கராக விளைச்சல் 50 சதவீதம் குறைந்தது. தற்போது ஆடி மாதத்திற்கு பின் போதிய மழையின்மையால், அதற்கும் குறைவான விளைச்சலே இருக்கும் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

### தென்னைக்கு நிவாரணம் கிடையாதா கொதிப்பில் தென்னை விவசாயிகள்

வத்திராயிருப்பு : நெல்லுக்கு கொடுக்கும் நிவாரணத்தொகையைக்கூட, தென்னைக்கு தரமறுக்கும் அதிகாரிகள் செயலால், தென்னை விவசாயிகள் கொதிப்படைந்துள்ளனர்.

வறட்சியால் பல்வேறு மாவட்டங்களில், தென்னை மரங்கள் கருகி, பெரும் இழப்பை ஏற்படுத்தி வருகின்றன. இதற்காக, அரசின் சார்பில், இதுவரை நிவாரண உதவி வழங்கப்படவில்லை. இதை கண்டித்து, விருதுநகர் மாவட்ட தென்னை விவசாயிகள் சங்கத்தினர், போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர். இதற்கான மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், கான்சாபுரத்தில் நடந்தது.

மாவட்ட துணை தலைவர் அண்ணாமலை தலைமை வகித்தார். விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் விஜயமுருகன் முன்னிலை வகித்தார்.

தென்னை விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் சிங்கராஜா வரவேற்றார். அக்., 12 முதல், கிராமங்கள் தோறும், அரசின் நிலைப்பாட்டை விளக்கி, பிரசாரம் மேற்கொள்வது , அக்.,18 அன்று கலக்டர் அலுவலகத்தை தென்னை விவசாயிகள் முற்றுகையிடுவது, என முடிவு செய்யப்பட்டது. விவசாயிகள் கூறுகையில், "காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு, கருகிய நெல்பயிர்களுக்கு, ஒரு ஏக்கருக்கு ரூ.13,500 வீதம் நிவாரண உதவி அரசு கொடுக்கிறது. ஆனால், 6 ஆண்டுகளுக்கு மேல் கஷ்டப்பட்டு வளர்த்து, பாதுகாத்து, அதன்பிறகு பலன் கொடுக்கும் தென்னை

மரங்களுக்கு, ஒரு ஏக்கருக்கு ரூ. 4,500 நிவாரண உதவி தருவதாக கூறுகிறார்கள். அதுவும், பல்வேறு போராட்டங்களுக்கு பிறகு முடிவு செய்கிறார்கள். அரசும், அதிகாரிகளும் எதை, அளவுகோலாக வைத்து, இந்த நிவாரண உதவியை முடிவு செய்கிறார்கள் என்று தெரியவில்லை. இதை வைத்து, ஒரு ஏக்கருக்கு தேவையான தென்னங்கன்றுகளைக்கூட வாங்க முடியாது,' என, கூறினர்.

### கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனை

வாலாஜாபாத் : உள்ளாவூரில் கால்நடைகளுக்கு, மருத்துவ பரிசோதனை செய்து, தடுப்பூசிகள் போடப்பட்டன.மூன்று மருத்துவர்கள் அடங்கிய கால்நடை மருத்துவக் குழுவினர், வாலாஜாபாத் அடுத்துள்ள உள்ளாவூர் ஊராட்சியில், 400 கால்நடைகளுக்கு, கோமாரி நோய், குடல்புழு நீக்கம், வலிப்பு நோய் ஆகிய நோய்கள் தாக்காமலிருக்க, நோய் தடுப்பு மருந்துகள் அளித்தனர்.

இதுகுறித்து, கால்நடை மருத்துவர் ஒருவர் கூறுகையில், 'கிராமப் பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு, பரிசோதனை மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் அளிக்கப்பட்டன' என்றார்.

### பண்ணை பயிர் மேலாண்மை திட்ட பணிகள்...தீவிரம்! 5 லட்சம் விவசாய நில மண் மாதிரி சேகரிப்பு

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத் தில் வேளாண்மை துறை சார்பில் பண்ணை பயிர் மேலாண்மை முறை திட்டத்தில் 5 லட்சம் விவசாயிகளின் நிலங்களில் இருந்து மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளது. இது வரை 3 லட்சம் விவசாயிகளின் நில மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 6 லட்சத்து 15 ஆயிரத்து 543 விவசாயிகளின் நிலங்களில் உள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள் ளது. முதற்கட்டமாக மாவட்டம் முழுவதும் சிறு குறு மற்றும் நடுத்தர விவசாயிகள் உள்ளிட்ட 5 லட்சத்து 10 ஆயிரத்து 656 விவசாயிகளின் நிலங்களில் மண் மாதிரிகள், வேளாண்துறை மூலம் சேகரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நடமாடும் மண் பரிசோதனை கூடம் அமைந் துள்ள வாகனம் மூலம் கிரா

மங்களில் ஆய்வு நடக்கிறது. விழுப்புரத்தில் உள்ள மண் ஆய்வு கூடத்திலும் விவசாயிகள் நேரடியாக வந்து மண் மாதிரி ஆய்வு செய்து கொள்ளலாம்.

பண்ணை பயிர் மேலாண்மை முறை திட்டத்தில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்படுகிறது. இதில், விவசாயியை பற்றி முழு விபரம், மண்வளம், வேளாண்மை ஆய்வு, இடு பொருள் விநியோகம் பதியப்படுகிறது.

விவசாயி விபரம்

பண்ணை பயிர் மேலாண்மை முறையில் விவசாயிகளுக்கு வழங்கும் கையேட்டில், விவசாயியின் அடையாள எண், அவ ரது பெயர், புகைப்படம், முகவரி, தொலைபேசி, நிலத்தின் வகை( நஞ்சை, புஞ்சை, மானாவாரி), சர்வே எண், பரப்பளவு, பயிர் காப்பீடு விபரம், பாசன விபரம் பதியப்படும்.

பயிர் சாகுபடியில் மூன்று பருவத்திற்கு உண்டான பரிந்துரைகள் செய்யப்படுகின்றன. பயிர், ரகம், பரப்பு, தொழில்நுட்பம், உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் உள்ளிட்ட விபரங்கள் குறிப்பிடப்படும்.

மண் ஆய்வு முடிவு

விவசாயியின் நிலத்தில் மண் மாதிரி ஆய்வு செய்த பின், அதில் உள்ள அங்கக கரிமம், தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, இரும்பு, மாங்கனீசு, துத்தநாகம், தாமிரம், போரான் ஆகிய நுண்ணூட்ட சத்துக்கள் குறித்த தகவல்கள் பதியப்படும். மண்ணின் தன்மைக்கேற்ப யூரியா, டிஏபி, பொட்டாஷ், சூப்பர் பாஸ்பேட், அம்மோனியம் சல்பேட் மற்றும் காம்ளக்ஸ் உரங்களை பயன்படுத்தும் முறைகள் பரிந்துரை செய்யப்படும். நுண்ணூட்ட கலவைகள் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம், தொழு உரம் பயன்படுத்தும் முறை பரிந்துரை செய்யப்படுகிறது.

நிலச்சீர்திருத்தம்

உவர் நிலத்தில் வடிகாலை சீராக்கி, உப்புநீரை நீக்க வேண்டும். அதிகளவு இயற்கை உரங்களை பயன் படுத்தி, உவர் தன்மையைத் தாங்கி வளரும் பயிர்களை சாகுபடி செய்யலாம்.

களர் நிலத்தில், தேவையான அளவு ஜிப்சம் இட்டு, உழுது பாசன நீரை தேக்கி

வடிக்க வேண்டும். பசுந்தாள் உரத்தை இட்டு, பயிரிட்டு மடக்கி உழ வேண்டும். சுண்ணாம்பு நிலத்தை அதிகளவில் பசுந்தாள் உரம் மற்றும் தொழு உரம் இடுவதுடன், பாசன நீர் தேங்குவதை தவிர்க்க வேண்டும். அமில நிலத்தில், நடவு பணிக்கு 2 வாரம் முன்பு, சுண்ணம்பை விதைக்க வேண்டும்.

இடுபொருள் விநியோகம்

விவசாயிகளுக்கு வழங்கும் இடு பொருட்கள் குறித்த விபரங்கள் தேதி வாரியாக பதியப்படுகிறது. இதன்படி விதை, விதை நாற்று, மரக்கன்று மற்றும் திசு வளர்ப்பு விநியோகம், வேளாண் கருவிகள், நீர்பாசன கருவிகள், நுண்ணுயிர் உரம், ஆர்கானிக் உரங்கள், நில சீர்திருத்த இடுபொருட்கள் ஆகியவை விநியோகிக்கப்பட்ட அளவு மற்றும் தேதி விபரம் பதியப்படும்.

இதேபோல், களைக்கொல்லி, இயற்கை பாதுகாப்பு இடுபொருட்கள், ரசாயன பயிர் பாதுகாப்பு இடுபொருட்கள் மற்றும் தார் பாய்கள், இதர இடுபொருட்கள் விநியோகம் செய்த தேதி பதியப்படும்.

பணிகள் தீவிரம்

விழுப்புரம் மாவட்டத்தில் பண்ணை பயிர் மேலாண்மை முறை திட்டத்தின்படி 6 லட்சத்து 15 ஆயிரத்து 543 விவசாயிகளின் நிலங்களில் உள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இது வரை 5 லட்சம் விவசாயிகளின் நிலத்தில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, 3 லட்சம் மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிகளை 7 வேளாண்மை உதவி அலுவலர்கள் மேற்பார்வையில் 16 வேளாண்மை பட்டதாரி பணியாளர்கள் தீவிரமாக மேற்கொண்டுள்ளனர்.

விழுப்புரத்தில் உள்ள மண் ஆய்வகத்தில் தினம் 2,500 மாதிரிகள் ஆய்வு செய்யப்படுகின்றது.

இந்த ஆய்வு முடிவுகள் விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த கையேட்டில் பதிவு செய்யப்படுகிறது. இந்த தகவல்கள் அனைத்தும், அந்தந்த விவசாயியின் அடையாள எண்ணுடன் வேளாண்மைத்துறை இணைய தளத்தில் பதிவு செய்யும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை ஒரு லட்சத்திற்கும்

மேற்பட்ட விவசாயிகளின் நிலம், மண் மாதிரி ஆய்வு முடிவுகள் உள்ளிட்ட விபரங்கள் அனைத்தும் இணைய தளத் தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

கண்டாச்சிபுரம்:கண்டாச்சிபுரம் பகுதியில் நள்ளிரவில் பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.
கண்டாச்சிபுரம் மற்றும் சுற்றியுள்ள கிராம விவசாயிகள் கடந்த சில வாரங்களாக மழையில்லாததால் நடவுப்பணி பாதிக்கப்படுவதாக வருத்தப்பட்டனர்.
நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் இடியுடன் மழை பெய்தது. நடவுப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக இருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

### தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகம் மேட்டூரில் இயங்குவதால் விவசாயிகள் அவதி

மேட்டூர்: கொளத்தூர் ஒன்றிய தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகம், மேட்டூரில் செயல்படுகிறது. இதனால், கொளத்தூர் ஒன்றிய விவசாயிகள், சாகுபடி தொடர்பான சந்தேகம் கேட்கவும், அரசு மானியம் பெறுவதற்கும், மேட்டூர் வரும் போது அலைகழிக்கப்படுகின்றனர்.
மேட்டூர் தாலுகா, கொளத்தூர் ஒன்றியத்தில், 2,000 ஹெக்டேரில் விவசாயிகள் வாழை, மஞ்சள், மிளகாய் உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்கின்றனர். ஒன்றிய வேளாண் உதவி இயக்குனர் அலுவலக கட்டிடம் கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் உள்ளது.
இதனால், கொளத்தூர் ஒன்றிய விவசாயிகள் எளிதாக வேளாண் உதவி இயக்குனர் அலுவலகம் சென்று மானியத்தில் நெல் மற்றும் பயிர் விதைகள், உரம் ஆகியவற்றை எளிதாக பெற்று கொள்கின்றனர். ஆனால், ஒன்றிய தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்துக்கு கொளத்தூரில் கட்டிடம் கிடையாது.
பல ஆண்டுகளாக தோட்டக்கலை அலுவலகம் மேட்டூர் பஸ் ஸ்டாண்டில் இருந்து ஒன்றரை கி.மீ., தூரம் மாதையன் குட்டை ரோட்டில் இயங்குகிறது. இப்பகுதிக்கு செல்ல பஸ் வசதியும் கிடையாது.

கொளத்தூர் ஒன்றிய தோட்டக்கலை விவசாயிகள் விதைகள், வேளாண் இடுபொருட்கள் வாங்குவதற்கும், தோட்டக்கலை பயிர் பராமரிப்பு குறித்த சந்தேகம் கேட்கவும், மேட்டூர் வந்து, அங்கிருந்து ஒன்றரை கி.மீ., தூரம் நடந்து அலுவலகம் செல்கின்றனர். அலுவலகத்தில் அதிகாரிகள் பணி நிமித்தமாக வெளியில் சென்று விடும் பட்சத்தில் மீண்டும் அலைகழிக்கப்படுகின்றனர்.
கொளத்தூருக்கு கள ஆய்வு மேற்கொள்ளும் தோட்டக்கலை அலுவலர்கள், உதவி அலுவலர்களும் கூட தினமும் மேட்டூரில் உள்ள அலுவலகத்துக்கு சென்று விட்டு, அதன் பின்பு கொளத்தூர் செல்ல வேண்டிய இருப்பதால் காலதாமதம் காரணமாக பணிகள் பாதிக்கிறது.
அலைகழிப்புக்கு பயந்து கொளத்தூர் ஒன்றியத்தில் பெரும்பாலான விவசாயிகளுக்கு தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்வதற்கு பதிலாக, வேளாண் பயிர் சாகுபடியில் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர். இதனால், தோட்டக்கலை பயிர் சாகுபடி பரப்பு கொளத்தூர் ஒன்றியத்தில் படிப்படியாக சரிந்து வருகிறது.
மேட்டூரில் இயங்கும் தோட்டக்கலை அலுவலகத்தை, கொளத்தூருக்கு மாற்ற வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வாழையில் "வாடல் நோய்' தாக்கு: நடவு செய்த விவசாயிகள் கவலை

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், பூ, பிஞ்சுகளுடன் தார் வெளிவரும் நிலையில் இருக்கும் வாழை மரங்களை, வாடல் நோய் தாக்கியதால், வாழை இலை மட்டைகள் காய்ந்து தொங்குகின்றனர். அதனால், வாழை நடவு செய்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், பணப்பயிரான வாழை தோப்பாகவும், ஊடு பயிராகவும் பயிரிடப்பட்டுள்ளது. இந்நிலையில், உடலுக்கு குளிர்ச்சியை தரும் மொந்தன் வாழை, ரஸ்தாளி ஆகிய வாழை மரங்களை, வாடல் நோய் தாக்கி வருகிறது.
ஆரம்பத்தில், வாழை மரத்தின் அடியில் இருக்கும் முதிர்ந்த இலைகளின் ஓரத்தில், மஞ்சள் நிறத்தில் புள்ளிகள் தோன்றி, படிப்படியாக இலை முழுவதும் பரவி

விடுகிறது. நோய் தாக்கிய மட்டைகள் காய்ந்து, ஒடிந்து தொங்கி விடுகிறது. குருத்து இலையின் தண்டு பகுதியை பிடித்து இழுத்தால், மண்ணில் இருக்கும் கிழங்கு பகுதி வரை, கருமை நிறமாக மாறி, அழுகல் வாடையுடன் காணப்படுகிறது.

மண்ணில் உள்ள கிழங்கு, தண்டு பகுதி முழுவதும் நோய் பரவியதால், தண்ணீர், சத்துகள் வேரில் இருந்து மற்ற பாகங்களுக்கு எடுத்துச் செல்லாமல் தடுக்கப்படுகிறது. இதனால், வாழை இலைகள் வாடி, காய்ந்து மட்டைகள் தொங்கி விடுகின்றன.

தும்பல்பட்டி, குள்ளப்பநாயக்கனூர், திப்பம்பட்டி, அடிக்கரை உள்ளிட்ட பகுதியில், மொந்தன், ரஸ்தாளி உள்ளிட்ட வாழை மரங்களை வாடல் நோய் தாக்கியுள்ளது. தற்போது, வாழை மரத்தில் இருந்து, பூ, பிஞ்சுகளுடன், குலை (வாழை தார்) வெளிவரும் சமயத்தில், நோய் தாக்கி, மரங்கள் காய்ந்து வருவதால், விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.

சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர்கள் கீதா, சுதா ஆகியோர் கூறியதாவது:

வாழையில் வாடல் நோய் மண் மூலம் பரவுகிறது. காயம் ஏற்பட்ட வாழை கிழங்கை நடவு செய்தால், மண்ணில் இருந்து, வேர் மூலம் பரவுகிறது.

வாழை கிழங்கை, கார்பெண்டாசிம் கரைசலில் நனைத்து நடவு செய்ய வேண்டும். நோய் தாக்கிய வாழை மரத்தை சுற்றி, மண்ணிலும் தெளிக்கலாம். நோய் முற்றிய வாழை மரத்தை வேரோடு பிடுங்கி, தீ வைத்து எரிப்பதால், மேலும் நோய் பரவாமல் தடுக்கலாம். நோய் தாக்கிய கிழங்கு குழியில், சுண்ணாம்பு இரண்டு கிலோ வீதம் போட்டு, கிழங்கு பகுதிக்குள் செலுத்தலாம்.

மூன்று மில்லி கார்பெண்டாசிம் கரைசலை நோய் தாக்கிய கிழங்கில், 10 செ.மீ., ஆழத்தில், ஊசி மூலம் செலுத்த வேண்டும். தொடர்ந்து இரண்டு, நான்கு மாதங்களில் ஊசி மூலம் மருந்து செலுத்தி, நோயை கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வாழையில் "வாடல் நோய்' தாக்கு: நடவு செய்த விவசாயிகள் கவலை

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், பூ, பிஞ்சுகளுடன் தார் வெளிவரும் நிலையில் இருக்கும் வாழை மரங்களை, வாடல் நோய் தாக்கியதால், வாழை இலை மட்டைகள் காய்ந்து தொங்குகின்றனர். அதனால், வாழை நடவு செய்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், பணப்பயிரான வாழை தோப்பாகவும், ஊடு பயிராகவும் பயிரிடப்பட்டுள்ளது. இந்நிலையில், உடலுக்கு குளிர்ச்சியை தரும் மொந்தன் வாழை, ரஸ்தாளி ஆகிய வாழை மரங்களை, வாடல் நோய் தாக்கி வருகிறது.

ஆரம்பத்தில், வாழை மரத்தின் அடியில் இருக்கும் முதிர்ந்த இலைகளின் ஓரத்தில், மஞ்சள் நிறத்தில் புள்ளிகள் தோன்றி, படிப்படியாக இலை முழுவதும் பரவி விடுகிறது. நோய் தாக்கிய மட்டைகள் காய்ந்து, ஒடிந்து தொங்கி விடுகிறது. குருத்து இலையின் தண்டு பகுதியை பிடித்து இழுத்தால், மண்ணில் இருக்கும் கிழங்கு பகுதி வரை, கருமை நிறமாக மாறி, அழுகல் வாடையுடன் காணப்படுகிறது.

மண்ணில் உள்ள கிழங்கு, தண்டு பகுதி முழுவதும் நோய் பரவியதால், தண்ணீர், சத்துகள் வேரில் இருந்து மற்ற பாகங்களுக்கு எடுத்துச் செல்லாமல் தடுக்கப்படுகிறது. இதனால், வாழை இலைகள் வாடி, காய்ந்து மட்டைகள் தொங்கி விடுகின்றன.

தும்பல்பட்டி, குள்ளப்பநாயக்கனூர், திப்பம்பட்டி, அடிக்கரை உள்ளிட்ட பகுதியில், மொந்தன், ரஸ்தாளி உள்ளிட்ட வாழை மரங்களை வாடல் நோய் தாக்கியுள்ளது. தற்போது, வாழை மரத்தில் இருந்து, பூ, பிஞ்சுகளுடன், குலை (வாழை தார்) வெளிவரும் சமயத்தில், நோய் தாக்கி, மரங்கள் காய்ந்து வருவதால், விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.

சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர்கள் கீதா, சுதா ஆகியோர் கூறியதாவது:

வாழையில் வாடல் நோய் மண் மூலம் பரவுகிறது. காயம் ஏற்பட்ட வாழை கிழங்கை நடவு செய்தால், மண்ணில் இருந்து, வேர் மூலம் பரவுகிறது.

வாழை கிழங்கை, கார்பெண்டாசிம் கரைசலில் நனைத்து நடவு செய்ய வேண்டும். நோய் தாக்கிய வாழை மரத்தை சுற்றி, மண்ணிலும் தெளிக்கலாம். நோய் முற்றிய வாழை மரத்தை வேரோடு பிடுங்கி, தீ வைத்து எரிப்பதால், மேலும் நோய் பரவாமல் தடுக்கலாம். நோய் தாக்கிய கிழங்கு குழியில், சுண்ணாம்பு இரண்டு கிலோ வீதம் போட்டு, கிழங்கு பகுதிக்குள் செலுத்தலாம்.

மூன்று மில்லி கார்பெண்டாசிம் கரைசலை நோய் தாக்கிய கிழங்கில், 10 செ.மீ., ஆழத்தில், ஊசி மூலம் செலுத்த வேண்டும். தொடர்ந்து இரண்டு, நான்கு மாதங்களில் ஊசி மூலம் மருந்து செலுத்தி, நோயை கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு புது வியூகம்

சேலம்: "எது காமராஜர் ஆட்சி' என்ற புத்தகத்தை, பொதுமக்களிடம் வழங்கி ஏற்காடு இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதென, விவசாயிகள் முடிவு செய்துள்ளனர்.

சேலத்தில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு செயலாளர் நல்லசாமி, பொருளாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:

வரும், 2014ல் நடைபெறும் பார்லிமென்ட் தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்களுக்கு விழப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், "எது காமராஜர் ஆட்சி?' என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. ஏற்காட்டில், "எது காமராஜர் ஆட்சி' புத்தகத்தை மக்களிடம் வழங்கி, திருப்பு முனையை ஏற்படுத்தும் வகையில் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும்.

இந்த நூலில், தமிழக முதல்வராக இருந்த காமராஜரின் சிறப்பு மிக்க ஆட்சி, அவருடைய எளிய வாழ்க்கை முறை, அவர் தீட்டிய திட்டங்கள், நிர்வாக திறமை, தமிழ் வளர்ச்சி ஆகியவை இடம் பெற்றுள்ளது.

வாக்காளர்களிடையே விழிப்புணர்வையும், பொறுப்புணர்வையும் ஏற்படுத்தும் விதத்தில் இந்த புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது.
ஏற்காடு தொகுதி முழுவதும் உள்ள மக்களிடம் புத்தகம் அறிமுகப்படுத்தப்படும். நல்லவர்களை, வல்லவர்களை, ஒழுக்கம் உள்ளவர்களை, கொள்கை பிடிப்புள்ள அரசியல் கட்சிகளை அடையாளம் கண்டு, வாக்களிக்க இந்த புத்தகம் உதவியாக இருக்கும்.
2014 தேர்தல் அறிவிப்புக்கு முன், "கள்ளுக்கு தடை நீக்கப்படுகிறது' என்ற அறிவிப்பு அரசிடமிருந்து வெளி வரும், என தமிழ்நாடு கள் இயக்கம் நம்பிக்கை கொண்டுள்ளது. அரசின் கண்டுகொள்ளாத போக்கு நீடித்தால், வரும் தேர்தலில் அதற்கான களத்தையும், வியூகத்தையும் அமைத்து கள் இயக்கம் செயல்படும்.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம் 60 நாளில் 41 டி.எம்.சி., சரிவு

மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு, 23,000 கனஅடி நீர் திறப்பதால், கடந்த, 60 நாளில், நீர் இருப்பு, 41 டி.எம்.சி., சரிந்துள்ளது.
காவிரி நீர்பிடிப்பு பகுதியில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததால், ஆகஸ்ட், 4ல் அணையின் மொத்த கொள்ளளவான, 120 அடியை எட்டியது.
ஆகஸ்ட், 10ம் தேதி வரை, 120 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம், டெல்டா பாசனத்துக்கு தொடர்ச்சியாக நீர் திறக்கப்பட்டதால், படிப்படியாக சரியத் துவங்கியது.
நேற்று வினாடிக்கு, 2,949 கனஅடி நீர் வந்த நிலையில், தினமும், 2 டி.எம்.சி., நீர் பாசனத்துக்கு திறப்பதால், மேட்டூர் அணை நீர்மட்டம் மளமளவென சரிந்து வருகிறது. நேற்று அணை நீர்மட்டம், 89.660 அடியாகவும், நீர் இருப்பு, 52.264 டி.எம்.சி.,யாகவும் குறைந்தது. கடந்த, 60 நாட்களில் அணை நீர்மட்டம், 31 அடியும், நீர் இருப்பு, 41 டி.எம்.சி.,யும் குறைந்துள்து.

## இயற்கை ரப்பர் இறக்குமதி 1.79 லட்சம் டன்னாக உயர்வு

புதுடில்லி:நடப்பு, 2013–14ம் நிதியாண்டில், ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான, ஆறு மாத காலத்தில், நாட்டின் இயற்கை ரப்பர் இறக்குமதி, 1.79 லட்சம் டன்னாக அதிகரித்து உள்ளது.இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதியை விட, 52.9 சதவீதம் அதிகம் என, ரப்பர் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**டயர் நிறுவனங்கள்:**சென்ற செப்டம்பர் மாதத்தில் மட்டும், இயற்கை ரப்பர் இறக்குமதி, 45,581 டன்னாக அதிகரித்து உள்ளது. இது, கடந்தாண்டின் இதே மாதத்தில், 14,779 டன்னாக இருந்தது.கடந்த, 2012–13ம் நிதியாண்டில், நாட்டின் இயற்கை ரப்பர் இறக்குமதி, 2.17 லட்சம் டன்னாக இருந்தது. இது, இதற்கு முந்தைய நிதியாண்டில், 2.14 லட்சம் டன்னாக குறைந்து காணப்பட்டது.

உள்நாட்டில், ரப்பர் உற்பத்திகுறைந்ததால், இந்திய டயர் தயாரிப்பு நிறுவனங்கள், தேவையை பூர்த்தி செய்து கொள்ள, அதிக அளவில் இயற்கை ரப்பரைஇறக்குமதி செய்து வருகின்றன. ரப்பர் வடிப்பு காலத்தில், கேரள மாநிலத்தில், அதிக மழைப் பொழிவால், இதன் உற்பத்தி குறைந்து போனது. இதன் காரணமாகவே, இயற்கை ரப்பரை அதிகளவில் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என, மோட்டார் வாகன டயர் தயாரிப்பு நிறுவனங்கள் கூட்டமைப்பின் தலைமை இயக்குனர் ராஜீவ் புத்தராஜா தெரிவித்தார்.நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்தில், இயற்கை ரப்பர் உற்பத்தி, முந்தைய நிதியாண்டின் இதே காலத்தை விட, 13.3 சதவீதம் குறைந்து, 3.43 லட்சம் டன்னாக சரிவுஅடைந்துள்ளது.

மலேசியா:சென்ற செப்டம்பர் மாதத்திலும், இதன் உற்பத்தி, கடந்தாண்டின் இதே மாதத்தைவிட, 4.9 சதவீதம் குறைந்து, 78 ஆயிரம் டன்னாக இருந்தது.உலகளவில், இயற்கை ரப்பர் உற்பத்தியில், இந்தியா, 4வது இடத்தில் உள்ளது. இருப்பினும், உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு, ரப்பர் உற்பத்தி இல்லாததால், நம் நாடு, மலேசியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளிலிருந்து,

இதை இறக்குமதி செய்து கொள்கிறது.

நாட்டின் ஒட்டு மொத்த இயற்கை ரப்பருக்கான தேவையில், டயர் தயாரிப்பு நிறுவனங்களின் பங்களிப்பு, 60 சதவீத அளவிற்கு உள்ளது.நடப்பு நிதியாண்டில், இதுவரையிலுமாக, டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு, 14 சதவீதம் சரிவடைந்துள்ளது. இந்நிலையிலும், உள்நாட்டை விட, அயல்நாடுகளில், இதன் விலை குறைவாக உள்ளது. இதற்கு எடுத்துகாட்டாக, பாங்காக் சந்தையில், ஒரு குவிண்டால் ஆர்.எஸ்.எஸ்–3 வகை இயற்கை ரப்பரின் விலை, 15,347 ரூபாயாக உள்ளது. இது, இதற்கு இணையான, இந்திய ரப்பர் விலையை விட, 8.5 சதவீதம் குறைவாகும்.ஆனால், இறக்குமதியாகும், ஒரு கிலோ ரப்பருக்கு, 20 ரூபாய் சுங்க வரி விதிக்கப்படுகிறது. இதனால், இறக்குமதியாகும் ரப்பரின் விலை, அதிகமாக உள்ளது. என்றாலும், தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு உள்நாட்டில், இயற்கை ரப்பர் இல்லாததால்,இதை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது என, ராஜீவ் புத்தராஜா குறிப்பிட்டார்.

இறக்குமதி வரி:உள்நாட்டு விவசாயிகளும், வர்த்தகர்களும், ஒரு கிலோ இயற்கை ரப்பர் மீதான இறக்குமதி வரியை, தற்போதைய, 20 ரூபாயிலிருந்து, 34 ரூபாயாக அதிகரிக்கும்படி, மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.ஆனால், இயற்கை ரப்பர் மீதான வரியை உயர்த்தினால், அது, உள்நாட்டு டயர் தயாரிப்பு நிறுவனங்களை பாதிக்கும் என்பதால், மத்திய அரசு, இக்கோரிக்கையை நிராகரித்தது.

நடப்பு நிதியாண்டில், இந்தியாவின் இயற்கை ரப்பர் இறக்குமதி, 2.50 லட்சம் டன்னாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என, இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**09.10.2013**

## விதை விற்பனை நிலையங்களில் வேளாண்மை அதிகாரிகள் ஆய்வு –

காஞ்சிபுரம், : மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சவுந்தரராஜன் தலைமையில் வேளாண்மை துறை அதிகாரிகள் மாவட்டம் முழுதும் உள்ள விதை விற்பனை நிலையங்களில் நேற்று முன்தினம் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

கொள்முதல் செய்துள்ள விதைகளுக்கு உரிய ஆவணங்கள் இருக்கிறதா, விதை சட்டத்தின்படி அனைத்து விதிமுறைகளும் முறையாக கடைப்பிடிக்கப்படுகிறதா, விலை பட்டியல் சரியாக இருக்கிறதா, இருப்பு வைக்கப்பட் டுள்ள விதைகள் காற்றோட்ட வசதியுடன் உள்ளதா, விதைகளில் முளைக்கும் திறன் அதிகமாக இருக்கிறதா என 16 தனியார் விதை விற்பனை நிலையங்களிலும் 300 மெட்ரிக் டன் அளவிலான விதை குவியல்களிலும் ஆய்வு செய்யப்பட்டது.

விதை குவியல்களில் இருந்து 38 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. விதை மாதிரி முடிவு வந்த பிறகு கலெக்டரின் ஆலோசனைப்படி தனியார் விதை விற்பனை நிலையங்களில் நடவடிக்கைக்கு பரிந்துரைக்கப்படும்.

இந்த ஆய்வின்போது விதை ஆய்வாளர் ராஜபாண்டியன், தேசிய விநாயகம், வெங்கடாசலம், ஜோதிலட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

விதை ஆதாரம், நிர்ணயம் பற்றி தகவல் அறிய சென்னை விதை ஆய்வு துணை இயக்குநர் 044-25343339 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.


## வெற்றிலை விலை உயர்வு



பரமத்திவேலூர் : நாமக்கல் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் வெற்றிலைகளை விவசாயிக ளும் தனியார் வெற்றிலை மண்டிகளுக்கும், தினசரி ஏல மார்க்கெட்டிற்கும் கொண்டு செல்கின்றனர்.

கடந்த வார ஏலத்தில் வெற்றிலை விலை சரிந்தது. கற்பூரி வெற்றிலை முதல் ரகம் 104 கவுளி கொண்ட ஒரு கோட்டை ரூ.1500க்கும், 2ம் ரகம் ரூ.1200க்கு, வெள்ளைக்கொடி முதல் ரகம் ரூ.2500க்கும், 2ம் ரகம் ரூ.2000க்கும் ஏலம் போனது. நேற்று நடைபெற்ற ஏலத்தில் கற்பூரி வெற்றிலை முதல் ரகம் ரூ.2000க்கும், 2ம் ரகம் ரூ.1700க்கும் ஏலம் போனது. இதேபோல் வெள்ளை வெற்றிலை முதல் ரகம் ரூ.3000, 2ம் ரகம் ரூ.2500க்கு ஏலம் போனது

## கறிக்கோழி விலை தொடர்ந்து சரிவு



ஈரோடு : புரட்டாசி எதிரொலியாகவும், கேரளாவில் பிளாட் ரேட் அடிப்படையில் கோழிக்கு வரி விதிக்கப்படுவதாலும் கறிக்கோழி விற்பனை கடும் பாதிப்படைந்துள்ளது.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை, விஜயமங்கலம், சென்னிமலை, திருப்பூர் மாவட்டம் பல்லடம், பொங்கலூர், உடுமலை, மடத்துக்குளம், நெகமம், அவிநாசி, பெருமாநல்லூர் போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கில் பண்ணைகள் உள்ளன.

கறிக்கோழிக்கு பல்லடம் பிராய்லர் கோ ஆர்டினேஷன் கமிட்டி (பிசிசிசி) மூலம்

பண்ணை கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. 3 நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ. 55க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், 2 தினங்களுக்கு முன்பு ரூ.45 ஆக விலை சரிவடைந்தது. இந்நிலையில் நேற்று கிலோவுக்கு ரூ.5 வீதம் உயர்ந்து ரூ.50க்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

கறிக்கோழியின் விலை வீழ்ச்சிக்கான காரணம் குறித்து பண்ணையாளர்கள் கூறுகையில், தமிழகத்திலிருந்து கேரளாவிற்கு அனுப்பப்படும் கறிக்கோழிக்கு கிலோ ரூ.95 வீதம் பிளாட் ரேட் நிர்ணயம் செய்யப்பட்டதுடன், 14.5 சதவீத நுழைவு வரியும் விதிப்பதால் கேரளாவிற்கு கறிக்கோழி அனுப்பி வைப்பது வெகுவாக குறைந்து விட்டது.

முன்பு நாள் ஒன்றுக்கு 4 லட்சம் கிலோ கறிக்கோழிகள் சென்று கொண்டிருந்த நிலையில் தற்போது 2 லட்சத்துக்கும் குறைவான கறிக்கோழிகளே கேரளாவிற்கு செல்கிறது. இதனால் உள்ளூர் சந்தையை நம்பியே கறிக்கோழிகளை விற்பனை செய்ய வேண்டி உள்ளது. இவ்வாறு பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

தினத் தந்தி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 09.10.2013

### கடந்த எண்ணெய் பருவத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி குறைந்தது



கொல்கத்தா

2012–13–ஆம் ஆண்டின் எண்ணெய் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 4.13 சதவீதம் சரிந்து 34.73 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது முந்தைய எண்ணெய் பருவத்தில் (2011–12) 36.23 லட்சம் டன்னாக இருந்தது.

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் (ஏப்ரல்–செப்டம்பர்) சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 4.68 சதவீதம் அதிகரித்து 8.37 லட்சம் டன்னிலிருந்து 8.76 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் மட்டும் 1.73 லட்சம் டன் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் இதே மாதத்துடன் (2,864 டன்) ஒப்பிடும் போது இது பன்மடங்கு அதிகமாகும்.

## பயனாளிகளுக்கு ரூ.5 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் வழங்கப்பட்டது

புதுக்கோட்டை,

புதுக்கோட்டை மாவ ட்ட மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு ரூ.5 கோடியே 16 லட்சத்து 22 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

<u>மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்</u>

புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில்¢ மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் மனோ கரன் தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் பட்டா மாறுதல் தொடர்பாக 80 மனுக்கள், முதியோர் உதவித்தொகை கோரி 35 மனுக்கள், இலவச வீடு வேண்டி 47 மனுக்கள், ரேஷன் கார்டு வழங்கக்கோரி 20 மனுக்கள், வேலை வாய்ப்புக்கோரி 43 மனுக்கள் மற்றும் இதர மனுக்கள் 212 என மொத்தம் 437 கோரி க்கை மனுக்களை, கலெக்டரி டம் பொதுமக்கள் வழங்கி னார்கள்.

<u>மனுக்கள் மீது நடவடிக்கை</u>

அந்த மனுக்களின் மீது சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உடனடி நடவடிக்கை மேற் கொள்ளுமாறு கலெக்டர் மனோகரன் உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் புதுக் கோட்டை நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் 20 பயனாளி களுக்கு ரூ.5 கோடியே 11 லட்சத்து 83 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்களை கலெக்டர் வழங்கினார்.

<u>நலத்திட்ட உதவிகள்</u>

மேலும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதல்- அமைச்சரின் விபத்து நிவாரண நிதியின்கீழ், புதுக் கோட்டை, ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை வட் டங்களைச் சேர்ந்த 13 பேருக்கு ரூ.4 லட்சத்து 39 ஆயிரத்து மதிப்பிலான காசோலைகளையும்,

மாவட்ட வழங்கல்துறை சார்பில் கறம் பக்குடி வட்டத்தை சேர்ந்த 12 பயனாளிகளுக்கு புதிய ரேஷன் கார்டுகளும் என மொத்தம் ரூ.5 கோடியே 16 லட்சத்து 22 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவ ட்ட வருவாய் அலுவலர் மாரிமுத்து, துணை ஆட்சியர்¢ (சமூகப் பாதுகாப்பு திட்டம்) பாக்கியம் தேவகிருபை, ஆர்.டி.ஓ. ராஜா ராமன், மாவட்ட வழங்கல் அலுவலர் மணிவண்ணன், நத்தம் நிலவரித் திட்ட தாசில்தார் கருப்பையா, நில அளவை சார் ஆய்வாளர்கள் பழனிவேல், நடேசன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாய பணிகளுக்கு வேளாண் இயந்திரங்களை பயன்படுத்திக்கொள்ள கலெக்டர் வேண்டுகோள்

புதுக்கோட்டை,

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாய பணிகளுக்கு வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் குறைந்த வாடகையில் வழங்கப்படும் இயந்திரங்களை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளுமாறு கலெக்டர் மனோகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஒரு செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

<u>வேளாண் இயந்திரங்கள்</u>

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறையினால் உரிய காலத்தில் வேளாண் பணிகளை செயல்படுத்திட இயலாத சூழ்நிலை உள்ளது. இந்நிலையில் பண்ணை சக்தியை அதிகரித்து வேளாண் பணிகளை உரிய நேரத்தில் செய்து முடித்து வேளாண் உற்பத்தியை பெருக்கிட வேளாண்மை இயந்திரங்களை பயன்படுத்துவது அத்தியாவசியமாக உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறையின் மூலம் குறைந்த வாடகையில் வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படுவது குறித்து விவசாயிகளுக்குத் தெரிவித்திட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. நில

மேம்பாட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு, மண் தள்ளும் இயந்திரம், உழுவை இயந்திரம், ஒருங்கிணைந்த நெற்கதிர் அறுவடை இயந்திரம், சிறுபாசன திட்டத்தின் விசைத் துளைக்கருவி, ஆழ்குழாய் கிணறு சுத்தப்படுத்திட காற்றமுத்த கருவி ஆகியவை வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மானியத்தில் கருவிகள்

வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தில் டிராக்டர்(40 எச்.பி. வரை), அதிகபட்ச மானியமாக 45 ஆயிரம் ரூபாய்க்கும், பவர் டில்லர்(8 எச்.பி.க்கு மேல்) அதிகபட்ச மானியமாக ரூ.45 ஆயிரத்துக்கும், சுழல் கலப்பை அதிகபட்ச மானியமாக ரூ.20 ஆயிரத்துக்கும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் மானிய விலையில் பல்வகை கதிரடிக்கும் இயந்திரம், விசை கதிர் அறுக்கும் கருவி, விசை களையெடுக்கும் கருவி, துல்லிய சமன்படுத்தம் கருவி, நெல் அறுவடை இயந்திரம், கரும்பு நடும் இயந்திரம் போன்ற வேளாண் கருவிகள் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 60 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்திலும் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே விவசாயிகள் தங்கள் தேவைக்கு புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தினையும், மேலும் விவரங்களுக்கு வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளரையும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.